Registered as a news paper.　　பக்கங்கள்: பன்னிரண்டு　　விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 வைகாசி 02 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ர.அவ்வல் 24 (15.05.2004) சனிக்கிழமை இதழ்:226

MANOJ AIR TRAVELS
MANOJ EXPRESS
The Finest Express Service in the Field
உள்நாட்டு வெளிநாட்டு விமான ரிக்கட்களுக்கும் பார்சல் மற்றும் தபால் சேவைகளுக்கும்
இல. 13, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 3916, 0777 801038
(சி/2485)

# புலிகள் மீதான தடையினை அமெரிக்கா நீக்கவேண்டும்!

## றொக்காவிடம் கூட்டமைப்பு வலியுறுத்து

(கொழும்பு)

**தமிழீழ விடுதலைப் புலிகள் மீது விதிக்கப்பட்டுள்ள தடையை அமெரிக்கா நீக்கவேண்டுமென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

**அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதிச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்காவை நேற்று சந்தித்தபோதே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டது.**

கடந்த பொதுத்தேர்தலில் விடுதலைப் புலிகளை தமிழ்மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக் கொண்டு, அதன் அடிப்படையிலேயே 22 நாடாளுமன்ற உறுப்பினர்களை மக்கள் தெரிவுசெய்தனர்.

இந்த வகையில் கடந்த இரண்டு வருடகாலமாக சமாதான முயற்சிகளில் ஈடுபட்டுவரும் விடுதலைப் புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்கவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

அதேவேளை - யுத்தத்தால் அழிந்துபோன வடக்கு - கிழக்கை கட்டியெழுப்பும் அதிகாரம் தமிழ் மக்களிடமே இருக்கவேண்டும் என்றும், இலங்கை அரசிடமோ, அமைச்சர்களிடமோ அதிகாரம் இருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாதென்றும் வலியுறுத்தியதாக அவர் மேலும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அன்ரன் பாலசிங்கம் லண்டன் திரும்பினார்



அன்ரன் பாலசிங்கத்தை வழியனுப்பும் புலிகளின் முக்கிய பிரமுகர்கள்.

(கிளிநொச்சி)

சமாதான முயற்சிகள் குறித்து தலைமைப்பீடத்துடன் கலந்துரையாடல்களை நடத்துவதற்காக வன்னிக்கு வந்திருந்த விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் நேற்று லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

கடந்த சனிக்கிழமை வன்னிக்கு வந்த கலாநிதி அன்ரன் பாலசிங்கம், தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனுடன் கலந்தாலோசனை நடத்தியதுடன் - அவருடன் இணைந்து நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜான் பீற்றர்சனைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தார்.

சமாதானப் பேச்சுக்களை ஆரம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சமாதான நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா ஆதரவு வழங்கும்!

## கிறிஸ்டினா றொக்கா தெரிவிப்பு

இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு அமெரிக்கா தனது பூரண ஆதரவை வழங்குவதாக - தெற்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க இராஜாங்க உதவிச் செயலாளர் கிறிஸ்டினா றொக்கா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும்போதே அவர் இந்தக் கருத்தை வெளியிட்டார்.

ஜனநாயக ரீதியாக இந்த அரசாங்கம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளதால் இலங்கை குறித்து அமெரிக்காவின் நிலைப்பாட்டில் எவ்வித

(12 ஆம் பக்கம் பார்க்க)

# 51 ஆவது, 52 ஆவது டிவிசன்களுக்கு புதிய கட்டளை அதிகாரிகள் நியமனம்!

(கொழும்பு)

யாழ்.குடாநாட்டில் நிலைகொண்டிருக்கும் இரண்டு இராணுவ டிவிஷன்களுக்கு புதிய கட்டளை அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருப்பதாக கொழும்பு சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வலிகாமம் பகுதியை மையமாகக் கொண்டு செயற்படும் 51 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் உபாலி எதிரிசிங்கவும், 52 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாக பிரிகேடியர் திஸ்ஸ ஜெயவர்த்தனவுமே புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை - ஏற்கனவே 51 ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய பிரிகேடியர் சனத் கருணாரட்ணவும், 52

(12 ஆம் பக்கம் பார்க்க)



ஜனாதிபதி சந்திரிகாவுடன் கிறிஸ்ரினா றொக்கா

# சமாதான செயலக செயலராக ஜெயந்த தனபால நியமனம்!

(கொழும்பு)



அரசாங்கத்தின் சமாதானச் செயலக செயலாளர் நாயகமாக ஜெயந்த தனபால ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அரசாங்கத்தின் சமாதான நடவடிக்கைகளை ஒருங்கிணைக்கும் சமாதான செயலகத்தின் செயலாளர் நாயகமாக நியமிக்கப்பட்டிருக்கும் ஜெயந்த தனபால, ஜனாதிபதியின் ஆலோசகராகவும் எதிர்வரும் ஜூன் முதலாம் திகதி முதல் பணியாற்றுவார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் ஜெயந்த தனபால செயற்படுவார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சிரேஷ்ட இராஜதந்திரியான தனபால, ஆயுதக் குறைப்புத் தொடர்பான ஐ.நாவின் செயலாளர் நாயகமாக 1998 முதல் 2003 வரை பணியாற்றியிருந்தார்.

இவர் இலங்கை வெளிநாட்டு சேவையில் நீண்டகாலமாகப் பணியாற்றி வந்ததுடன், ஜெனிவா மற்றும் வொஷிங்ரனில் தூதுவராகப் பணியாற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஒட்டுசுட்டான் வெடிவிபத்தில் இளைஞர் ஒருவர் மரணம்!

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டம் ஒட்டுசுட்டான் பகுதியில் படையினர் நிலைகொண்டிருந்தபோது புதைத்து வைத்திருந்த வெடிபொருள் ஒன்று வெடித்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் இன்னொருவர் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்றுக்காலை 6.30 மணியளவில் இடம்பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# வட-கிழக்கு அபிவிருத்தி ஒரே நிறுவனத்தின் கீழ்!

## கிறிஸ்ரினா றொக்காவிடம் பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

பல்வேறு நிறுவனங்கள் ஊடாக முன்னெடுக்கப்பட்டுவந்த வடக்கு-கிழக்குப் பகுதிகளுக்கான அபிவிருத்திப் பணிகள், தற்போது ஒரே நிறுவனத்தின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்டுள்ள தென்கிழக்காசிய விவகாரங்களுக்கான அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்கா - நேற்று பிரதமர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297,
077-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
(சி/2489)
EXPOAIR
Your friend in·the skies...

# Jaffna Municipal Council Public Library

## Vacancy

### Post of Network Administrator on Contract Basis

Application will be received from eligible candidates for the post of Network Administrator for the programme in the Computerize the jaffna public Library under UNESCO project. The job involves Network maintenance, Trouble shooting, Antivirus updating, etc..

**Qualifications**

a) Have a Good command of English.
b) Bachelor Degree in Computer Science or IT field.
c) Be a resident of Jaffna.

**Job description**

a) Act as Manager of Local area Networks
b) Train staff IT and Internet use.
c) Attend day to day problems including Virus Applications.
d) Advise management regarding upgrading IT issues.
e) Provide management with creative ideas to enhance linkages to National, Regional and International Networks.
f) Write proposals for grant funding facilities on IT issues.
g) Publicized the IT and other facilities available in the Library.

**Experience**

a) Minimum of 03 years experience in Network Applications and in the related field.

**Condition of Service**

This is purely contract service, after the UNESCO project completed this post will be Suppressed.

**Salary**

Rs 15000/- to 20000/- per month :- Depending on qualifications and experience.

Applications should be prepared by the applicant with the Bio-Data and sent to the Municipal Commissioner Jaffna on or before 25.05.2004.

E.Ramalingam,
Municipal Commissioner,
Municipal Council,
Jaffna.

(சி-2527)

தேர்தல் முடிவுகளின் எதிரொலியை அடுத்து

# ஜக்குபாய் பட விவாதத்தை கைவிட்டார் ரஜினிகாந்த்!

(சென்னை)

ரஜினி தனது அடுத்த படமான ஜக்குபாயின் கதை விவாதத்தை திடீரென நிறுத்திவிட்டு ஹைதராபாத்துக்குச் சென்றுவிட்டார்.

மக்களவைத் தேர்தல் முடிவுகள் மூலம் பா.ம.க நிறுவுனர் டாக்டர் ராமதாசுக்கும், நடிகர் ரஜினிகாந்த்துக்கும் இடையே நிலவிவந்த நிழல் யுத்தத்தின் முதல் சுற்றில் ராமதாஸ் வெற்றிபெற்றுள்ளார்.

பாபா படத்தில் ஆரம்பித்த பிரச்சினை பெரிதாகி பா.ம.க போட்டியிடும் 6 தொகுதிகளிலும் அந்தக்கட்சியைத் தோற்கடிக்கச் சபதம் பூண்டார் ரஜினிகாந்த். தனது ரசிகர்களையும் அந்த தொகுதிகளில் களம் இறக்கி விட்டார்.

அத்தோடு நிருபர்களை அழைத்து பா.ஜ.க-அ.தி.மு.கவை ஆதரிப்பதாக மனம் திறந்தார். அப்போது வன்னியர்களிடம் நியாயம் கேட்பது போல உருக்கமாகப் பேட்டியளித்தார். ரஜினியின் இந்தப்பேட்டியால் பா.ம.க வேட்பாளர்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது.

வாக்குப் போட்டுவிட்டு வந்த ரஜினி, இரட்டை இலைக்கு வாக்களித்தேன் என்றார். ஆனால், தேர்தல் முடிவுகள் ரஜினிக்கு பெரும் அதிர்ச்சியைத் தந்துள்ளன. பா.ம.க போட்டியிட்ட 6 இடங்களிலும் பெரும்வாக்கு வித்தியாசத்துடன் வெற்றிபெற்றுள்ளது.

அதிலும், ரஜினியின் ஆதரவை தனிப்பட்ட முறையில் பெற்றதாகக் கூறப்படும் தர்மபுரி, பாண்டிச்சேரி பா.ஜ.க வேட்பாளர்களுக்குப் பெரும் தோல்வி கிடைத்துள்ளது. பா.ம.கவினிடையே பெரும் ஆரவாரத்தை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில், நேற்று வரை இயக்குநர் கே.எஸ்.ரவிக்குமாரின் வீட்டில் நடந்த ரஜினியின் ஜக்குபாய் கதை விவாதம் திடீரென நிறுத்தப்பட்டுவிட்டது. நேற்று ரஜினி ஹைதராபாத் செல்கிறார்.

கதை விவாதம் நிறுத்தப்பட்டுவிட்டதால் ரவிக்குமாரும் நேற்று குடும்பத்துடன் மலேசியா, சிங்கப்பூருக்கு சுற்றுலா சென்றுள்ளார்.

## தனியார் பாதுகாப்பு நிறுவனங்களுக்கு வேண்டுகோள்

பல்கலைக்கழகத்தின் பாதுகாப்பு சேவையினை தனியார் மயமாக்குவதன் மூலம் தமது சொந்த அபிலாசைகளை நிறைவேற்ற சிலர் முயல்கின்றனர் எனக் கருதுகின்றோம்.

எனவே இந்தத் தனியார் மயமாக்கும் நடவடிக்கைகளுக்கு எந்த வித ஒத்துழைப்பும் வழங்கவேண்டாமென சகல தனியார் பாதுகாப்புச்சேவை நிறுவனங்களையும் வினயமாக வேண்டுகின்றோம்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

(731)

**The Royal College**

மாணவர்களே ஆங்கிலத்தில் குறைந்த மதிப்பெண்களைப் பெறுகின்றீர்களா? கவலை வேண்டாம்.

Spoken English, Grammar.

By - விக்கினேஸ்வரன் ஆச்சாரி,
426 (302) K.K.S வீதி,
யாழ்ப்பாணம். (சி-2490)

**ராஜா** யாழ்ப்பாணம்.

5 ஆவது கடைசி வாரம்
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த
கில்லி



காட்சிநேரம்:-10.30,2.30,6.30,9.30 (பு.நே)
21 ஆம் திகதி முதல்
ஆயுதஎழுத்து
(சி-2387)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

விஜய், சிநேகா, நாசர் நடித்த
வசீகரா
காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.9.00 (பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45 (பு.நே.)
ஜேம்ஸ் பொண்ட் 007 நடித்த
The World is not enough
(சி-2386)

**நாகம்ஸ்** சுன்னாகம்

3 ஆவது வெற்றிவாரமாக
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடாக
டொல்பி ஒலியமைப்புடன்
விக்ரம், ஜோதிகா,
கபாலி, வடிவேலு
நடித்த
அருள்
(றீல்ஸ்)



(சி-2397)

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

மே 7 முதல் அருள் திரைப்படம் திரையிடப்படும் இறுதிநாள் வரையான நுழைவுச் சீட்டுக்களை ரசிகர்களே பாதுகாத்துக்கொள்ளுங்கள்.

குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் மூன்று ரசிகர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்கப்படும்.

1 ஆம் பரிசு - துவிச்சக்கரவண்டி
2 ஆம் பரிசு - C.D பிளேயர் ஒசாக்கி
3 ஆம் பரிசு - மேசை மின் விசிறி

# பணிநிலை வேண்டுகை

ஆயப்பகுதியிற் கீழ்வரும் பணிநிலைகளுக்குத் தகுதியுடையவர்களிடமிருந்து வேண்டுகைகள் கோரப்படுகின்றன. தகைமையுடையவர்கள் தன் வரலாற்றுச் சான்றிதழ்களுடன் 2004.05.18 ஆம் நாள் காலை 10.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள ஆயப்பகுதி நடுவப்பணியகத்திற்கு சமுகம் தரவும்.

## பணிநிலை:-

### 01. ஆய உதவியாளர் (புளியங்குளம்)

**கல்வித் தகைமை:**
க.பொ.த (சா/த) இல் 04 பாடங்களில் சித்தி.
**சம்பள அளவுத்திட்டம்:**

$$\frac{3080 - 4180}{10x110} + 2000$$

### 02. ஆய அலுவலர் (புளியங்குளம்)

**கல்வித் தகைமை:**
க.பொ.த (உ/த) இல் 03 பாடங்களில் சித்தி.
**சம்பள அளவுத்திட்டம்:**

$$\frac{3630 - 4730}{10x110} + 2000$$

### 03. உள்ளகக் கணக்காய்வாளர் (புளியங்குளம்)

**கல்வித் தகைமை:**
க.பொ.த (உ/த) இல் வர்த்தகப்பிரிவில் சித்தி.
**சம்பள அளவுத்திட்டம்:**

பயிலுநர் 3000+2000

### 04. எரிபொருட் களஞ்சியக் காப்பாளர்

**கல்வித் தகைமை:**
க.பொ.த (உ/த) இல் சித்தியடைந்திருத்தல்.
அல்லது க.பொ.த (சா/த)உடன் 02 ஆண்டுப் பணிப்பட்டறிவு.
**சம்பள அளவுத்திட்டம்:**

பயிலுநர் 3000+2000

### 05. வரவேற்பாளர்

**கல்வித் தகைமை:**
க.பொ.த (உ/த) இல் 03 பாடங்களில் சித்தி(ஆங்கில அறிவுடையவர்கள் விரும்பத்தக்கது).
**சம்பள அளவுத்திட்டம்:**

$$\frac{3300 - 4300}{10x100} + 2000$$

### 06. மொழிபெயர்ப்பாளர்

**கல்வித் தகைமை:**
க.பொ.த (சா/த) உடன் சிங்கள, ஆங்கில மொழிகள் எழுத, வாசிக்கத் தெரிந்தவராக இருத்தல் வேண்டும். சம்பளம் தகைமைக்கேற்ப்ப பேசித் தீர்மானிக்கப்படும்.

(சி/2526)

# அரசின் சமாதான முயற்சிகள் நிலையற்றதென்கிறது ஐ.தே.க

## தமது ஆதரவும் கிடைக்காதாம்

அரசாங்கத்தின் சமாதான முயற்சிகள் நிலையற்றதென்பதால், தாம் அதற்கு ஆதரவளிக்கப் போவதில்லை என ஐக்கியதேசியக் கட்சி தெரிவித்துள்ளது. ஐக்கிய தேசியக்கட்சி கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

இதில் கருத்து வெளியிட்ட முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், அரசாங்கம் இன்றைய சமாதானம் தொடர்பாக மாறுபட்ட கருத்துக்களை வெளியிட்டு வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளை ஏகபிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டமையால்தான் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த முடிந்தது.

எனினும், இன்றைய அரசாங்கத்தில் அங்கம் பெற்றுள்ள ஜே.வி.பியினரும் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் முன்னர் வெளியிட்ட கருத்துக்களுக்கும், தற்போது வெளியிட்டு வரும் கருத்துக்களுக்கும் மாறுபாடுகள் இருக்கின்றன.

இவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளார்கள். அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் பலரும் இடைக்கால தன்னாட்சி அதிகாரம் தொடர்பாக முரண்பட்ட கருத்துக்களை கொண்டுள்ளனர்.

எனவே இவர்களால் முழுமையான சமாதானத்தை முன்னெடுத்துச் செல்லமுடியாது என, முன்னாள் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் குறிப்பிட்டார்.

இந்த மாநாட்டில் பங்கேற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கா கருத்துத் தெரிவிக்கையில் - இந்தவருட இறுதியில் ஆடைத் தொழில்துறையின் கோட்டா முறை முடிவடைவதால் சுமார் 11 இலட்சம் பேர் நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கப்படவுள்ளனர்.

எனினும் இதனைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை எனத் தெரிவித்தார்.

இதேவேளை, முன்னர் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியின் போது பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டது. ஆனால், இன்று மன்னாரில் தமிழீழ விடுதலைப் புலிகள் முகாம் அமைத்துள்ளதாக வெளியான தகவல் குறித்து அரசாங்கம் மௌனமாக இருப்பதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்கா இங்கு தெரிவித்தார்.



அமெரிக்காவுக்கு விஜயம் செய்துள்ள வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் வொஷிங்ரனிலுள்ள புறூக்கில்ஸ் இன்ஸ்ரிரியூற்றில் உரை நிகழ்த்திய பின்னர் பார்வையாளர் ஒருவருடன் உரையாடுகிறார்.

## கடற்படை சிப்பாய் சுட்டுக்கொலை

மதவாச்சிப் பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவமொன்றில் கடற்படைச் சிப்பாய் ஒருவர் கொல்லப்பட்டார்.

மதவாச்சியிலுள்ள புனாவை கடற்படை முகாமில் பணியாற்றும் முதலிகே டொன் வருணநிலாந்த என்பவரே இச்சம்வத்தின் போது கொல்லப்பட்டவராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவருக்கும், சக கடற்படை சிப்பாய் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட வாக்குவாதம் கட்டுப்பாட்டை மீறியதை அடுத்தே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## அமெரிக்கா செல்பவர்களால் ஏற்படும் மோசடியை கட்டுப்படுத்த புதிய திட்டம்!

(கொழும்பு)

அமெரிக்காவுக்கு செல்லும் நபர்களுக்கு ஏற்படும் மோசடிகளையும், குற்றங்களையும் கட்டுப்படுத்துவதற்கு புதிய திட்டம் ஒன்றை அந்த நாட்டுக்கான இலங்கைத் தூதரகம் அறிமுகப்படுத்தவுள்ளது.

இதன்படி - அமெரிக்கா செல்வதற்கு விசா வழங்கப்படும் நபர்களின் கைரேகைகளை பதிவு செய்யவுள்ளதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெவ்றி லன்ஸ்ரீட் கூறியுள்ளார்.

கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

அமெரிக்காவினால் உலகெங்கும் அறிமுகப்படுத்தப்படும் இந்தத் திட்டத்தில் இலங்கை 120 ஆவது நாடாக இடம்பெறுகிறது.

கைரேகைகளைப் பெறும்போது மை, வர்ணம் சார்ந்த எந்தவித பொருட்களும் பயன்படுத்தபடமாட்டாது. இலத்திரனியல் ரீதியிலான ஸ்கானிங் முறை பயன்படுத்தப்படும். இதன்மூலம் விசா பெறுபவர்கள் நம்பிக்கைத் தன்மையும், பாதுகாப்பும் உறுதிப்படுத்தப்படும் என்று குறிப்பிட்டார்.

## கிறிஸ்ரினா றொக்கா கொழும்பை வந்தடைந்தார்

(கொழும்பு)

தெற்காசிய விவகாரத்துக்குப் பொறுப்பான அமெரிக்காவின் பிரதி ராஜங்கச் செயலாளர் நேற்றுமுன்தினம் மாலை கொழும்புக்கு வந்து சேர்ந்தார்.

நேற்றுமுன்தினம் மாலை 4.35 மணியளவில் கட்டுநாயக்கா விமான நிலையத்தை வந்தடைந்த கிறிஸ்ரினா றொக்காவை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜெப்ரி லன்ஸ்ரிட் மற்றும் தூதரக அதிகாரிகள் வரவேற்றனர்.

இவர் தனது இலங்கை விஜயத்தின் போது - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா உட்பட பல்வேறு அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேசவுள்ளார்.

## நாடாளுமன்றில் மதமாற்ற தடைச் சட்டத்தை சமர்ப்பிக்கப் போவதாக ஹெல உறுமய தெரிவிப்பு

நாடாளுமன்றத்தில் மதமாற்றத் தடைச் சட்டப் பிரேரணையை மிக விரைவில் சமர்ப்பிக்கப் போவதாக ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

முறையற்ற வகையில் இடம்பெற்றுவரும் மதமாற்ற நிகழ்வுகளை தடுக்கும் நோக்கிலேயே, இந்தப் பிரேரணையை முன்வைக்கவுள்ளதாகவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

பல சட்ட வல்லுநர்களின் ஆலோசனையுடன் தயார் செய்யப்பட்டுள்ள இந்த மதமாற்றச் தடைச்சட்டப் பிரேரணை, இந்தியாவின் தமிழ்நாடு, மத்தியப் பிரதேசம் மற்றும் ஓரிசா மாநிலங்களில் உள்ள மத மாற்றச் தடைச்சட்டங்களின் அடிப்படையிலேயே தயார்செய்யப்பட்டுள்ளதாகவும் ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

பௌத்தமதத்தை பாதுகாப்பதற்காக அரசியல் யாப்பில் கொடுக்கப்பட்டுள்ள முன்னுரிமை அடிப்படையில் ஏனைய மதங்களுக்கான சுதந்திரத்தையும் பாதிக்காத வகையில் இந்த மதமாற்றத் தடைச் சட்டப் பிரேரணை அமைந்துள்ளதாகவும் அக்கட்சி மேலும் தெரிவித்துள்ளது.

கிராமப் புறங்களில் காணப்படும் ஏழ்மையைக் காரணம் காட்டி வெளிநாட்டு தொண்டு நிறுவனங்கள் பல முறையற்ற வகையில் மதமாற்ற நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அந்தக் கட்சி சுட்டிக் காட்டியுள்ளது.

அத்துடன், இந்த மதமாற்றச் தடைச்சட்டப் பிரேரணை நாடாளுமன்றத்தில் ஏற்றுக் கொள்ளப்படும் பட்சத்தில் - இத்தகைய முறையற்ற மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் தொண்டு நிறுவனங்கள் தடைசெய்யப்படக்கூடிய சாத்தியப்பாடுகள் தோன்றும் எனவும் ஜாதிக ஹெல உறுமய நம்பிக்கை தெரிவித்துள்ளது.

## ஆங்கில மொழி மூலம் சமூகக்கல்வி; ஆசிரிய விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் தரம் 6,7,8, ஆம் வகுப்புக்களுக்கு ஆங்கில மொழி மூலம் சமூகக்கல்விப் பாடத்தை கற்பிப்பதற்கான விண்ணப்பங்கள் சேவையிலுள்ள வடக்கு - கிழக்கு மாகாண ஆசிரியர்களிடமிருந்து கோரப்பட்டுள்ளது.

இந்தப் பாடநெறிக் கற்பித்தலை மேற்கொள்ள விரும்பும் ஆசிரியர்கள் தமது கல்வித்தகமை, சேவைக் காலம், மற்றும் ஆங்கிலத் தகமை போன்றவற்றைக் குறிப்பிட்டு எதிர் வரும் 25 ம் திகதிக்கு முன் வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக மாகாணக் கல்விப்பணிப்பாளர், வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வித் திணைக்களம், திருகோணமலை என்னும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேணடும்.

தெரிவுசெய்யப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## சப் இன்ஸ்பெக்டர்கள் இருவர் பதவி விலக்கப்பட்டுள்ளனர்!

(கொழும்பு)

கல்கிசை பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த இரண்டு சப் இன்ஸ்பெக்டர்கள் பதவி விலக்கப்பட்டுள்ளனர். நேற்றுமுன்தினம் இவர்கள் இருவரும் கல்கிசை கடற்கரைப் பகுதியில் அமைந்துள்ள விருந்தகத்தில் ஆயுதத்தைக் காட்டி பயமுறுத்தி இளைஞர் ஒருவரை பாலியல் துன்புறுத்தலுக்கு உட்படுத்திய குற்றச் சாட்டின் பேரிலேயே இந்த பதவி நீக்கம் மேற்கொள்ளப்பட்டது.

குறிப்பிட்ட இளைஞர் இது தொடர்பாக கல்கிசைப் பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து, சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் மீதும், குறிப்பிட்ட இரண்டு பொலிஸ் அதிகாரிகளும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயற்சித்ததாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

விசாரணைகளின்போது இவர்கள் வசம் இருந்த துப்பாக்கிகள் இரண்டும் பொலிஸாரின் ஆயுதக் களஞ்சியத்திலிருந்து திருடப்பட்டவை என தெரியவந்துள்ளதாக கல்கிசை பொலிஸார் தெரிவித்தனர்.

## வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 156 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில்!

### நிகொட் நிறுவன மாகாண பணிப்பாளர் லங்காநேசன்

(திருகோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள 2002 பாடசாலைகளில் 156 பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் இருக்கின்றன. 144 பாடசாலைகள் வேறு இடங்களில் இயங்குகின்றன. இவை அனைத்துக்கும் தேவைகள் அதிகமாகவே இருக்கின்றன. இவை அனைத்தையும் நிவர்த்தி செய்யவேண்டியது எம் எல்லோரதும் கடமையாகும்.

வடக்கு - கிழக்கு மாகாண சமுதாய மீளமைப்புத் திட்டத்திற்கு உள்ள நிதியோ 1200 மில்லியன் ரூபா மட்டுமே. இவ்வாறு நிகொட் நிறுவனத்தின் மாகாணப் பணிப்பாளர் ரி.லங்காநேசன் தெரிவித்தார்.

திருகோணமலை - கன்னியா அ.த.க பாடசாலையில் 13 லட்சம் செலவில் நிகொட் நிறுவனத்தால் அமைக்கப்பட்ட புதிய கட்டட திறப்பு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் -

ஒவ்வொரு பாடசாலையி னதும் தேவைகள் அதிகமாகவே இருக்கின்றன. நிதி குறிப்பிட்ட சில பாடசாலைகளுக்கு மட்டும் ஒதுக்கீடு செய்யமுடியாது. மாகாணத்தில் உள்ள 8 மாவட்டங்களுக்கும் நிதி பகிரப்படவேண்டும்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் மூன்று லட்சத்து ஐம்பதினாயிரத்துக்கும் அதிகமான வீடுகள் அழிக்கப்பட்டுள்ளன. இவை திரும்பவும் கட்டிக் கொடுக்கப்படவேண்டும்.

அரசாங்கம் ஒவ்வொரு வீட்டுக்கும் 75 ஆயிரம் ரூபாவை வழங்குகின்றது. கிண்ணியா கிராமத்தில் 300 வீடுகளை புனரமைக்க தமிழர் புனர்வாழ்வுக் கழகத்துக்கு நிதியுதவி வழங்கியுள்ளோம்.

பாதிக்கபட்ட வீட்டு உரிமையாளர்களுக்கு அவர்களின் ஜீவனோபாய உதவித் திட்டத்தில் 25 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்கு எம்மிடம் நிதி இருக்கின்றது. தகுதியுடையவர்களது பட்டியல் கிராம சேவையாளர்கள் மூலம் சேகரிக்கப்பட்டு அரசாங்க அதிபர் ஊடாக சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் உரியவர்களுக்கு 48 மணி நேரத்துக்குள் அவரவர்களின் வங்கிக் கணக்குகளில் அத் தொகை வைப்புச் செய்யப்படும்.

இதேவேளை, பிரச்சினைகள் அதிகமாகவும், கஷ்டப்படுவர்களை அதிகமாகவும் கொண்ட மாவட்டம் திருகோணமலையாகும். இம் மக்களது கஷ்டங்கள் விரைவில் தீர்த்துவைக்கப்படவேண்டும். இந்தப் பாடசாலைக்கு திருத்தியமைக்கப்பட்ட கட்டடம், நூல் நிலையம் தேவையென அதிபர் தெரிவித்தார்.

அங்கு நூல் நிலையத்துக்கான எவ்வித வசதிகளும் இல்லை. இவர்களின் நூல் தேவைக்காக கொள்வனவு செய்வதற்காக விரைவில் 25 ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனவும், பாடசாலையின் பாதுகாப்புக்காக சுற்றுவேலி அமைப்பதற்காக நிதியுதவியும் வழங்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இலங்கைக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கப் போவதாக அமெரிக்கா தெரிவிப்பு

இலங்கையின் பாதுகாப்பு, மனித உரிமை, பன்முகத்தன்மை, ஜனநாயகம் முதலானவற்றை பாதுகாப்பதற்கான உதவிகளை தொடர்ந்தும் வழங்கப் போவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அண்மையில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் வொஷிங்ரனில் இடம்பெற்ற சந்திப்பின்போது அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் கொண்டலீசா ரைஸ் இதனைக் தெரிவித்தார்.

இதேவேளை, அமெரிக்காவிடமிருந்து நேரடியாக உதவி பெறும் நாடுகளின் பட்டியலில் இலங்கையும் தெரிவுசெய்யப்பட்டிருப்பது குறித்து அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நேற்றுமுன்தினம் ஜனாதிபதிக்கும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கும் தனது வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்துள்ளார்.

அமெரிக்காவின் நிதியுதவி பெறவுள்ள 16 நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதால் சுமார் நூறு மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி இலங்கைக்கு கிடைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# இந்திய அணியிடம் தோற்றமைக்கு ஒற்றுமையின்மையே காரணமாகும்!

## பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர்

ஒற்றுமையின்மையும், உற்சாகமின்மையும் தான் இந்தியாவுக்கு எதிரான தொடரில் பாகிஸ்தான் அணியின் தோல்விக்கு காரணம் என்று, பாகிஸ்தான் கிரிக்கெட்சபை தெரிவித்துள்ளது.

இந்தியாவுக்கு எதிரான ஒருநாள், டெஸ்ட் தொடரில் பாகிஸ்தான் அணியின் தோல்விக்கான காரணம் குறித்து ஆய்வு செய்துவந்த பாகிஸ்தான் கிரிக்கெட்சபை கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தது.

ஒற்றுமையின்மையும் உற்சாகமின்மையும் தான் தோல்விக்கு முக்கிய காரணம் என்று, பாகிஸ்தான் கிரிக்கெட் சபைத் தலைவர் ஷஹாரியார்கான் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஷஹாரியார்கான் கூறுகையில் - தோல்விக்கான காரணம் பற்றி யோசிக்கையில், குறிப்பிட்டு பெயர்களைச் சொல்ல நான் விரும்பவில்லை. ஆனால், எதிர்காலத்தைப்பற்றி யோசிக்க வேண்டியது மிகவும் அவசியம். 2007 ஆம் ஆண்டு நடைபெற உள்ள உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிக்கு வலுவான பாகிஸ்தான் அணியை உருவாக்குவது பற்றி ஆலோசிக்கவேண்டியது மிகவும் அவசியம்.

லாகூரிலும், கராச்சியிலும் வீரர்களை நான் தனித்தனியாக சந்தித்தேன். அப்போது அணியில் ஒற்றுமை, உற்சாகம் இல்லை என்பதை தெரிந்துகொண்டேன்.

கப்டன் பொறுப்பிற்கு இன்சமாம் மிகவும் சிறந்தவர். அதனால்தான் தற்போது கப்டன் பதவியை அவருக்கு கொடுத்துள்ளோம். அவரும் பதவியில் நீடித்துவருகிறார். ஒருநாள் போட்டித் தொடரில் பாக். அணி கடுமையாகப் போராடியது. ஆனால் ஒருசில காரணங்களால் டெஸ்ட் தொடரில் தோல்வியுற்றோம். டெஸ்ட் தொடரில் கடைசிப் போட்டியில் எல்லாமே எங்களுக்கு தவறாக அமைந்துவிட்டது. எல்லாவற்றையும்விட இந்தியஅணி ஒற்றுமையுடனும், இணைந்தும் மிகச்சிறப்பாக விளையாடியது.

அனுபவமும், திறமையும் நிறைந்த அணியாக இந்தியா உள்ளது. இளம் வீரர்கள் நல்ல முறையில் வழிகாட்டப்படுகின்றார்கள். எனவே இந்திய அணியின் வெற்றியானது வியப்பளிப்பதாக அமையவில்லை என்று ஷஹாரியார்கான் கூறியுள்ளார்.

## விளையாட்டு

# தூஸ்ராவுக்கு தடைவிதித்தாலும் முரளியின் பந்துவீச்சு அபாயமானது!

## கில்கிறிஸ்ட் கூறுகிறார்



இலங்கை அணியின் நம்பிக்கை நட்சத்திரமான முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடைவிதித்து இருந்தாலும், அவர் ஒரு அபாயகரமான பந்துவீச்சாளர் என்று அவுஸ்ரேலிய அணியின் கில்கிறிஸ்ட் தெரிவித்துள்ளார்.

முரளிதரனின் தூஸ்ரா பந்துவீச்சுக்கு சர்வதேச கிரிக்கெட் சபை தடைவிதித்துள்ளது. தூஸ்ரா பந்துவீசாவிட்டாலும் சர்வதேச கிரிக்கெட்டில் அவர் ஒரு அபாயகரமான பந்துவீச்சாளர்.

முரளிதரனிடம் அளவுக்கு அதிகமான திறமை பொதிந்துள்ளது. அவரது பந்துவீச்சில் இருந்து ஒன்றை மட்டும் குறைத்துவிடுவதால் அவருடைய பந்துவீச்சு சாதாரணமாகி விடாது. அவர் ஒரு சிறந்த பந்துவீச்சாளராகவே தொடர்வார்.

விதிகளுக்கு முரணாக முரளிதரன் பந்துவீசியதாக நான் நினைக்கவில்லை. ஆனால் சட்டதிட்டங்களுக்கு கட்டுப்படுவது அவசியம் என்று கூறினார்.

# பிரெஞ் ஓபனில் நவரத்திலோவாவும்

அமெரிக்காவைச் சேர்ந்த 47 வயதான பிரபல ரெனிஸ் வீராங்கனை மார்ட்டினா நவரத்திலோவா பலமுறை ஓய்வுமுடிவை அறிவித்துவிட்டு ரெனிஸ் களத்துக்கு திரும்பியிருக்கிறார்.

இந்தநிலையில், இந்த மாதம் கடைசியில் தொடங்க இருக்கும் பிரெஞ்சு ஓப்பனில் மார்ட்டினா நவரத்திலோவா ஆடுகிறார். இதற்காக அவர் நேரடி தகுதி பெற்றுள்ளார். 10 ஆண்டுகள் இடைவேளைக்கு பிறகு நவரத்திலோவா ஒற்றையர் ஆட்டத்தில் விளையாடவுள்ளார்.

உலகின் இரண்டாம் நிலை வீராங்கனையான கிங்கிலிஸ்டர்ஸ் காயம் காரணமாக இந்தப்போட்டியில் இருந்து விலகியுள்ளார். இது அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பிரெஞ்சு ஒபன் ரெனிஸ் வருகிற 24 ஆம் திகதி முதல் ஜூன் 6 ஆம் திகதிவரை பாரிஸ் நகரில் நடைபெறவுள்ளது.

# எதிர்வரும் சிம்பாப்வேக்கான பயணம் நேரத்தை வீணடிப்பதாக இருக்காது

## அவுஸ்ரேலிய பயிற்சியாளர் கருத்து

டெஸ்ட் கிரிக்கெட்டில் முதல் இடத்தில் இருக்கும் அவுஸ்ரேலிய அணிக்கு, எதிர்வரும் சிம்பாப்வே பயணமானது நேரத்தை வீணடிக்கும் பயணமாக இருக்காது என்று, அவுஸ்ரேலிய அணியின் பயிற்சியாளர் ஜோன்புக்கானன் தெரிவித்துள்ளார்.

சிம்பாப்வே அணிக்கு எதிரான தொடரில் விளையாடுவதற்காக அவுஸ்ரேலிய அணி அங்கு செல்லவுள்ளது. சிம்பாப்வே கிரிக்கெட் யூனியனுடன் ஏற்பட்ட மோதலின் காரணமாக சிம்பாப்வே அணியைச் சேர்ந்த 15 வீரர்கள் அணியில் இருந்து விலகியுள்ளனர். இதனால் சிம்பாப்வே அணி வலுவிழந்த அணியாக உள்ளது.

வலுகுறைந்த அணியாக இருக்கும் சிம்பாப்வே அணியும், வலுவான அணியாக இருக்கும் அவுஸ்ரேலிய அணியும் மோதவுள்ளன. வலுவில்லாத அணியாக இருக்கும் சிம்பாப்வே அணியுடன் மோதுவது, நேரத்தை வீணாக்குவதுபோல் இராது என்று, அவுஸ்ரேலிய அணியின் பயிற்சியாளர் ஜோன்புக்கானன் தெரிவித்துள்ளார். இது குறித்து ஜோன்புக்கானன் கூறியுள்ளதாவது,

சிம்பாப்வே அணிக்கு எதிரான 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டித்தொடரில் எளிதாக வென்றுவிடலாம் என்ற மனநிலையுடன் அவுஸ்ரேலிய அணிவீரர்கள் இருந்தால் அது தவறாகும். சிம்பாப்வே அணி வலுவில்லாத அணியென்று எல்லோரும் கருதுவது மிகவும் தவறானதாகும், அபாயகரமானதாகும்.

டெஸ்ட்போட்டிகளில் அவுஸ்ரேலிய அணி விரைவாக முடித்துவிடும். இந்தத் தொடரின் போது, அவுஸ்ரேலிய வீரர்கள் தங்களுடைய புள்ளிவிபரங்களை அதிகரித்துக்கொள்வார்கள் என்றும் எல்லோரும் பேசிவருகின்றனர். இது தவறானதாகும் இப்படிப்பட்ட மனநிலையுடன் எந்த ஒரு அணியும் அயல்நாட்டுத் தொடரில் விளையாடினால் அதுமோசமான ஒன்றாகும்.

சிம்பாப்வேயில் சிறப்பான டெஸ்ட்கிரிக்கெட்டை விளையாடவேண்டும். சிறப்பாக விளையாடினால் முடிவு தானாக வந்துசேரும் என்று ஜோன்புக்கானன் தெரிவித்தார்.

# நவம்பரில் இந்தியாவுக்கு தென்னாபிரிக்க அணி வரும்!

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி நவம்பர் மாதம் இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாட திட்டமிட்டுள்ளது. அந்த அணி ஒருநாள் போட்டியில் மட்டுமே விளையாட இந்தியா அட்டவணை தயாரித்தது.

ஆனாலும் டெஸ்ட்டிலும் விளையாட விருப்பம் உள்ளதாக தென்னாபிரிக்கா தெரிவித்துளளது. இதை இந்தியாவும் ஏற்றுக்கொண்டதாகத் தெரிவிக்கின்றது.

தென்னாபிரிக்க அணி 2 டெஸ்ட் மற்றும் 4 ஒருநாள் போட்டியில் இந்தியாவுடன் விளையாடும் எனத் தெரிவித்தது. அவுஸ்ரேலிய அணி இந்தியாவில் சுற்றுப்பயணத்தை முடித்த பிறகு தென்னாபிரிக்க அணி இந்தியா வரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தென்னாபிரிக்க அணி இலங்கை வருகிறது!

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி ஜூலை, ஓகஸ்ட் மாதங்களில் இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து 2 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

ஜூலை 27 ஆம் திகதி அந்த அணி இலங்கை புறப்படவுள்ளது. முதல் டெஸ்ட் ஓகஸ்ட் 4 ஆம் திகதி காலியிலும், இரண்டாவது போட்டி ஓகஸ்ட் 17 ஆம் திகதி கொழும்பிலும் ஆரம்பமாகி நடைபெறும். ஒருநாள் போட்டிகள் ஓகஸ்ட் 20, 22, 25, 28 மற்றும் 30 ஆம் திகதிகளில் நடைபெறும்.

## இங்கிலாந்து அணியுடனான

# முதலாவது டெஸ்ட் போட்டியில் பிளெமிங் விளையாடமாட்டார்!

இங்கிலாந்து அணிக்கு எதிரான முதல் டெஸ்ட்டில் நியூசிலாந்து அணியின் கப்டன் பிளெமிங் விளையாடுவது சந்தேகத்திற்கு இடமாகியுள்ளது.

இங்கிலாந்து, நியூசிலாந்து அணிகளுக்கிடையேயான டெஸ்ட் தொடரின் முதல் போட்டி வரும் 20 ஆம் திகதி லோட்சில் தொடங்குகின்றது. இந்தப் போட்டியில் நியூசிலாந்து அணியின் கப்டன் ஸ்டீபன் பிளெமிங் விளையாடுவது சந்தேகத்திற்கு இடமாகியுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் முதல் கணுக்கால் வலியால் அவதிப்பட்டுவரும் பிளெமிங், நேற்று முன்தினம் துவங்கிய கென்ட் அணிக்கு எதிரான 4 நாள் பயிற்சி ஆட்டத்தில் விளையாடவில்லை.

முதல் டெஸ்டில் விளையாட பிளெமிங் முழு உடற்தகுதியுடன் இருக்கவேண்டும் என்பதற்காக அவர் பயிற்சி ஆட்டத்தில் விளையாடவில்லை என்று நியூசிலாந்து அணியின் பயிற்சியாளர் ஜோன்பிரேஜ்வெல் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்தின் சிறந்த கிரிக்கெட் வீரராகக் கடந்த மாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட பிளெமிங்கை - சர்வதேச கிரிக்கெட்டில் முதன்மையான கப்டன் என்று நியூசிலாந்து கிரிக்கெட் சபை தலைமை நிர்வாகி மார்டின் ஸ்நெட்டன் தெரிவித்துள்ளார்.

நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையே 3 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெறவுள்ளது. இதன்பிறகு முத்தரப்புத் தொடர் ஒன்றும் நடைபெறவுள்ளது.

# அவுஸ்ரேலிய அணியை நெருங்குவதற்கு தொடரில் சிறப்பாக விளையாடவேண்டும்

## கங்கூலி கூறுகிறார்



(புதுடில்லி)

அவுஸ்ரேலியாவுக்கு எதிராக இந்தவருடக் கடைசியில் நடைபெறவிருக்கும் தொடரில், சிறப்பாக விளையாடுவதன் மூலம் அவுஸ்ரேலிய அணிக்கும், இந்திய அணிக்கும் இடையே இருக்கும் இடைவெளி குறைக்கப்பட வாய்ப்பு இருப்பதாக கப்டன் கங்கூலி தெரிவித்துள்ளார்.

இது குறித்து கங்கூலி அளித்துள்ள பேட்டியில் கூறியிருப்பதாவது -

அவுஸ்ரேலிய அணியை நெருங்க வேண்டும் எனில், தொடர்ந்து அந்த அணியைப் போல சிறப்பாக விளையாடவேண்டும்.

இந்தவருட கடைசியில் இந்தியாவில் நடைபெறவிருக்கும் அவுஸ்ரேலிய அணிக்கு எதிரான தொடரில் வெற்றிபெற்றால் இந்திய அணி முதல் இடத்தைப் பிடிக்குமா? என்று கேட்கப்பட்ட கேள்விக்கு கங்கூலி பதிலளிக்கையில், அவுஸ்ரேலியாவுக்குச் சமமாக வர வேண்டும் எனில், அவர்களைப் போல தொடர்ச்சியாக விளையாடவேண்டும் என்று தெரிவித்தார்.

இது குறித்து கங்கூலி மேலும் கூறுகையில் கடந்த பல வருடங்களாக அவுஸ்ரேலிய அணி சிறப்பாக விளையாடி வருகிறது. இதனால் நம்பர் -1 இடத்தில் அந்த அணி உள்ளது.

அதேபோல் இந்திய அணியும் சிறப்பாக விளையாடி வருகின்றது. டெஸ்ட் போட்டிகளில் அவர்களுக்கு எதிராக சிறப்பாக விளையாடி உள்ளோம்.

ஒருநாள் போட்டிகளில் அவர்கள் நமக்கு எதிராக சிறப்பாக விளையாடி உள்ளனர். ஆனால் எதிர்வரும் அவுஸ்ரேலியாவுக்கு எதிரான தொடரில் சிறப்பாக விளையாடினால் அவர்களை நாம் நெருங்க முடியும்" என்று கங்கூலி கூறினார்.

# ஐ.சி.சியின் கூட்டம் டுபாயில் ஆரம்பம்!

(டெல்கி)

இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனான சுனில் கவாஸ்கர் தலைமையிலான சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி) கூட்டம் டுபாயில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

சமீபத்தில் கிரிக்கெட் உலகில் சர்ச்சையை ஏற்படுத்திய முரளிதரனின் பந்துவீச்சு விவகாரம் உட்பட பல விடயங்கள் இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

முரளிதரனின் பந்துவீச்சு பற்றிய விடயம் மட்டுமன்றி, கிரிக்கெட் விளையாட்டு தொடர்பாக அனைத்து விடயங்களும் விவாதிக்கப்படும் என்றும், சுனில் கவாஸ்கர் தெரிவித்தார். கவாஸ்கர் தவிர பன்னிரண்டுபேர்களைக் கொண்டதாக சர்வதேச கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் கமிட்டி உள்ளது.

அவுஸ்ரேலிய அணியின் முன்னாள் வீரரான டிம்மே இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரரான ஆங்குஸ்பிரேசர், இலங்கை அணியின் முன்னாள் வீரர் அரவிந்தடி சில்வா ஆகியோர் போன்ற முன்னாள் வீரர்கள் இந்தக் கமிட்டியில் இடம்பெற்றுள்ளனர்.

எதிர்காலத்தில் கிரிக்கெட் விளையாட்டில் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவது குறித்து இந்தக் கூட்டத்தில் விவாதிக்கப்படவுள்ளது. இந்தக் கூட்டத்தில் சர்வதேச கிரிக்கெட்சபையின் தலைவர் ஈசான் மணி, தலைமை நிர்வாகி மல்கம் ஸ்பீட்,பொதுமேலாளர் டேவிட் ரிச்சர்ட்சன் ஆகியோர் கலந்துகொண்டனர். சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைமையகத்தை டுபாய்க்கு மாற்றுவதற்கான வாய்ப்புகள் இதன்மூலம் அதிகமாகியுள்ளன.

# மந்திரம்



**கோ**டையில் சுரிக்கும் நானும் தாத்தா வீட்டுக்குச் சென்றிருந்தோம். சுரிக்கு எனது தம்பி. எனது வயது ஏழு, முதல் வகுப்பில் சேர்ந்திருந் தேன். சுரிக்கு இன்னும் பள்ளி செல் லும் வயது வரவில்லை. ஆயினும் அவன் நான் சொல்வதைக் கேட்ப தில்லை. கேட்காவிட்டால் போ, எனக்கு என்ன, என்று நான் அவ னைப் பொருட்படுத்தாமல் இருந்தேன். தாத்தா வீட்டுக்குப் போனதும் முதல் வேலையாய் நாங்கள் வெளிமுற்றம், கொட்டில்கள், பரணி அறை ஆகிய எல்லா இடங்களையும் ஆராய்ந்தோம். காலிக் கண்ணாடி ஜாடியையும் ஒரு சிறு தகர டப்பாவையும் நான் எடுத்துக் கொண்டேன். சுரிக்கு உதிரியாகக் கிடந்த கதவு கைப்பிடியையும் ஒரு பெரிய ரப்பர் சப்பாத்தினையும் எடுத்துக்கொண்டான்.

பரணி அறையில் மீன்பிடிக்கும் தூண்டில் ஒன்று இருந்தது. அது யாருக்கு என்று எங்களுக்குள் சண்டை மூண்டு விட்டது. நான்தான் அதை முதலில் பார்த்தவன். பார்த்ததும் 'இது என்னு டையது' என்று கூறினேன். பிறகுதான் சுரிக்கு அதைப் பார்த்தான். உடனே, 'என்னுடையது, என்னுடையது...' என்று கத்தி னான்.



தூண்டிலில் ஒரு முனையை நான் பிடித்துக் கொண்டேன். இன் னொரு முனையை அவன் பற்றிக் கொண்டான். இருவரும் இழுத்துப் பறித் துக்கொண்டு நின்றோம். எனக்கு வந்த கோபத்தில் தூண்டில் கம்பை வெடுக்கென ஆட்டி இழுத்தேன். எதிர்முனை அவன் பிடியில் இருந்து நழுவிவிட்டது, அவன் மல்லாந்து விழுந்தான்.

"இந்த உதவாக்கரைக் கம்பு யாருக்கு வேண்டும்? என்னிடம் சப்பாத்து இருக்கிறது" என்றான் அவன். "நீ உன்னுடைய சப்பாத்தைக் கட்டிக்கொண்டு அழு, ஆனால் என்னுடைய தூண் டிலைத் தொடாதே" என்றேன் நான்.

கொட்டிலுக்குள் ஒரு மண்வெட்டி இருந்தது. அதை எடுத்துக் கொண்டு நான் மண்ணைத் தோண்டி புழுக்கள் சேகரிப்பதற்காகப் புறப்பட்டேன். தகர டப்பாவிற்குள் புழுக்களை நிரப்பிக்கொண்டு மீன் பிடிக்கச் செல்வதென ஏற்கனவே நான் முடிவு செய்திருந்தேன். சுரிக்கு பாட்டியிடம் சென்று தீப்பெட்டி வேண்டும் என்று கேட்டான்.



"எதற்காக உனக் குத் தீப்பெட்டி?" என்று அவர் விசாரித்தார். "வெளிமுற்றத்தில் நான் சொக்கப்பனை கொழுத்தப் போகி றேன். சப்பாத்தை அந்தத்தீயில் காட்டி உருக்கி ரப்பராக்கப் போகிறேன்"

"நல்லாயிருக்கிறதே இது" என்று கைகளை வீசி வியந்துகொண்டார் பாட்டி. "கொஞ்சம் கவனமின்றி இருந்தால் வீட்டையே நீ தீவைத்து எரியச்செய்துவிடுவாய் போல் இருக்கிறதே சிறு பிள்ளைகள் தீப்பெட்டியை வைத்துக்கொண்டு விளையாடக்கூடாது, தீப்பெட்டியைத் தரமாட்டேன். போய் நல்லமாதிரி விளையாடு நீ"

**சிந்தனைக்கு!**

கடமைகள் நம்முடை யவை. நிகழ்ச்சிகள் கடவுளுடையவை.



# சிறுவர் அரங்கம்

ஆகவே, சுரிக்கு நூல் கயிற்றின் ஒரு முனையை தன்னிடம் இருந்த கதவுக் கைபிடி யிலும் இன்னொரு முனையைச் சப்பாத் திலும் கட்டினான். பிறகு சப்பாத்தை இழுத்துக் கொண்டு வெளி முற் றத்தில் அங்கும் இங் கும் ஓடினான். நான் மண்ணைத் தோண்டி புழுக்கள் எடுப்பதைப் பார்த்துவிட்டு, "இது வீண் வேலைதான், உன்னால் மீன்பிடிக்கமுடியாது" என்று சொன்னான்.



"ஏனாம்?"

"நான் மந்திரம் போட்டு மீனை உன் தூண்டிலுக்கு அருகே வராதபடி செய்துவிடுவேன்."

"ஆளைப்பார் நீயும் உன் மந்திரமும்" என்று அவனைக் கேலி செய்தேன். டப்பாவில் புழுக்களை நிரப்பிக்கொண்டு நான் குட்டைக்குப் போய்ச் சேர்ந்தேன்.

வீட்டுக்குப் பின்னால் கூட்டுப் பண்ணையின் காய்கறித் தோட்டம் ஆரம்பமான இடத்திலிருந்தது அந்தக் குட்டை. தூண்டில் முள்ளில் ஒரு புழுவை வைத்து நீருக் குள் எறிந்துவிட்டு நான் கரை யில் உட்கார்ந்து கொண் டேன். தூண்டில் முள்ளை மீன் கடிப்பதற்காகப் பொறு மையுடன் காத்திருந்தேன்.



அப்போது சுரிக்கு ஓசை யின்றி என் முதுகுக்குப் பின் னால் வந்து நின்றுகொண்டு பலக்கக்கத்தினான்.

"சூ மந்திரகாளி, சூ மந்திரகாளி மீனெல்லாம் ஓடி மறையட்டும்"

நான் ஒன்றும் சொல்லா மல் மவுனமாக இருப்பதென முடிவு செய்துகொண்டேன். ஏனெனில் நான் ஏதாவது சொன்னால் அவன் மேலும் பலத்த குரலில் கத்தவே செய்வான் என்று எனக்குத் தெரியும். இரண்டு மூன்று தரம் கத்திச் சலிப்படைந்ததும் சப்பாத்தை அவன் குட்டைக்குள் எறிந்தான்.

கயிற்றால் அதைக் கரைக்கு இழுத்துத் திரும்பவும் குட்டைக்குள் தூக்கியெறிந்தான். பிறகு கற்களால் அடித்த அதை நீருக்குள் மூழ்கவைக்க முயன்றான்.

ஓரிரண்டு நிமிடங்கள் நான் வாயை மூடிக்கொண்டு பார்த்தேன். பொறுமையிழந்துபோய் அவனைப் பார்த்துக் கூச்சலிட்டேன்.

"இங்கே நிற்காதே மீன்களை மிரண்டு ஓடச் செய்கிறாய். இங்கிருந்து ஓடுகிறாயா? எழுந்து வரட்டுமா?"

"எப்படியும் உன்னால் மீன்பிடிக்க முடியாது, நான் மந்திரம் போட்டுவிட்டேன்"

என்று சொல்லி மீண்டும் அவன் குட்டையின் மையத்திற்குச் சப்பாத்தை விட்டெறிந்தான்.

(தொடரும்)

# இயற்கை அதிசயங்கள்

## அமேசன் காடுகள்



தென் அமெரிக்காவில் பல்லாயிரக் கணக்கான ஏக்கர் பரப்பில் பரவி இருக்கும் அமேசன் காடுகள் புதுமையான படைப்பாகும். இவை மழைக் காடுகளாகும். இங்குள்ள மிருகங்கள் மற்றும் தாவரங்களின் வகை, அவற்றின் எண்ணிக்கை பற்றி இன்னும் கணக்கிட முடியாதுள்ளது. உலகின் எந்தப் பிரதேசத்திலும் காணமுடியாத தாவரம் மற்றும் விலங்குகளை இங்கே காணலாம். இக்காடுகள் 7 மில்லியன் கிலோ மீற்றர் பரப்பளவைக் கொண்டவையாகும்.

## எவர்க்லேட்ஸ் தேசியப் பூங்கா



இங்கு உலகில் அரிய, காணக் கிடைக்காத ஒரு சூழல் அமைப்பொன்றைக் காணலாம். அமெரிக்காவின் தென் புளோரிடாவில் அமைந்திருக்கும் இந்த இடமானது ஒரு சேற்று நிலமாகும்.

ஆயினும், இப்பகுதி பெரிய மரங்களாலும் செடி, கொடிகளாலும் மூடப்பட்டுள்ளது. இதனால், மரங்களால் மூடப்பட்ட ஆறு என இந்தப் பிரதேசம் குறிப்பிடப்படுகிறது.

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண் ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங் கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாண வர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். தட்டச்சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ்வரும் கூப்பனைப் பூர்த்திசெய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :..........................................

கற்கும் பாடசாலை :..........................................

கற்கும் தரம் :..........................................

வீட்டு முகவரி :..........................................

........................ ........ ........................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

**ஓவியப்போட்டி**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
**267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

## பிரமாண்டமான சிக்வோயா மரம்



அமெரிக்காவில் காணக்கூடிய சிக்வோயா மரங்களில் பிரமாண்டமான மரமாக இதைக் குறிப்பிடலாம். இம்மரம் ஊசி இலைத் தாவர இனத்தைச் சேர்ந்ததாக இருப்பதுடன் இப் பிரமாண்டமான மரம் சிக்வோயா தேசிய பூங்காவில் உள்ளது.

இது 84 மீற்றர் உயரமாகும். இந்த மரத்தின் சுற்றளவானது 111 மீற்றராகும். 1990ஆம் ஆண்டு இந்த மரம் 2500 மெட்ரிக் தொன் எடையுள்ளதென மதிப்பிடப்பட்டது.

## சகாரா பாலைவனம்



வட ஆபிரிக்காவில் அமைந்துள்ள சகாரா பாலைவனம் உலகின் மிகப் பெரிய பாலைவனமாகவுள்ளது. இந்தப் பாலைவனத்தின் அகலம் 1,610 கிலோ மீற்றராகும். நீளம் 5,150 கிலோ மீற்றராகும்.

இந்தப் பாலைவனத்தின் மொதத நிலப்பரப்பு 91 மில்லியன் கிலோ மீற்றராகும். இதில் 207,000 சதுர கிலோ மீற்றர் பாலைவனச் சோலையாகவுள்ளது.

## விக்டோரியா நீர்வீழ்ச்சி



சம்பியா நதியில் உற்பத்தியாகிவரும் விக்டோரியா நீர்வீழ்ச்சியே உலகின் மிக அழகான நீர்வீழ்ச்சி எனக் குறிப்பிடப்படுகின்றது.

சாம்பியா மற்றும் சிம்பாப்வே நாடுகளுக்கிடையில் அமைந்துள்ள விக்டோரியா நீர் வீழ்ச்சியிலிருந்து தெறித்துச் சிதறும் நீர்த்துளிகள் 110 மீற்றர்வரை பரவுகின்றது. இதன் காரணமாகவே உள்ளூர்வாசிகள் இந்நிகழ்ச்சியைப் "புகைக்கும் பிசாசு" என்று அழைப்பர்.

## சாக்கடல்



தண்ணீரில் மூழ்காமல் மிதக்கக்கூடிய கடலொன்று இருப்பதாயின் அது சாக்கடலாகும்.

ஜோர் தானுக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் காணப்படும் இந்த உவர் நீர்க்கடல் சுமார் 10,000 வருடகாலமாக ஆவியாக்கத்திற்கு உட்பட்டதன், விளைவாக உப்பின் ஈர்க்கும் தன்மை அதிகமாகவுள்ளது.

## அந்தாட்டிக்கா



உலகின் தென் அந்தத்தில் பனிக்கட்டிகளால் உருவான கண்டம் அந்தாட்டிக்காவெனக் குறிப்பிடப்படுகின்றது. பரப்பளவில் உலகின் 5 ஆவது மிகப் பெரிய கண்டத்தை ஒத்தது. கண்டங்களில் இறுதியாக கண்டுபிடிக்கப்பட்ட கண்டமாக இதைக் குறிப்பிடலாம். இதன் பனிக்கட்டிகளின் படையானது 2000 மீற்றராக உள்ளது. இங்குள்ள நிலப்பரப்பின் பரப்பளவானது 14 கிலோ மீற்றர் ஆகவுள்ளது. *

இங்கே மடிக்கவும்

# இளந்தேனீக்கள் கழகம்
## அங்கத்தவர்கள்



முழுப்பெயர் :- சு. சுரேஸ்
கற்கும் பாடசாலை :-
பிரான்பற்று கலைமகள்
வித்தியாலயம்.
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, வானொலி கேட்டல்,
பாடம் படித்தல்.



முழுப்பெயர் :- அ. அனந்தா
கற்கும் பாடசாலை :-
செம்பியன் பற்று அரசினர் தமிழ்
கலவன் பாடசாலை.
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு,
முத்திரை சேகரித்தல், பத்திரிகை
வாசித்தல்.



முழுப்பெயர் :- த. சகிலா
கற்கும் பாடசாலை :-
பளை மத்திய கல்லூரி
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
பாடம் படித்தல்,
வானொலிகேட்டல்.

முழுப்பெயர் :- யோ. ஜிந்துஷா
கற்கும் பாடசாலை :-
ஸ்கந்தவரோதயக் கல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
படித்தல், தொலைக்காட்சி பார்த்தல்,
விளையாடுதல்.

முழுப்பெயர் :- செ. பிரியதர்சினி
கற்கும் பாடசாலை :-
கோப்பாய் மகா வித்தியாலயம்
தரம் :- 5
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், பத்திரிகை வாசித்தல்,
தகவல் சேகரித்தல்.

முழுப்பெயர் :- அ. ஆன்ஜெறோஜினி
கற்கும் பாடசாலை :-
இளவாலை கன்னியர் மடம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கதை வாசித்தல், கதை,
கவிதை எழுதுதல்.

முழுப்பெயர் :- ப. சுவிதா
கற்கும் பாடசாலை :-
வேலணை மத்திய கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல், கதை வாசித்தல்,
கல்வித்துறை.

முழுப்பெயர் :- ம. றொஷாந்தி
கற்கும் பாடசாலை :-
நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்,
முத்திரை சேகரித்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பி வையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்
### விண்ணப்பம்

முழுப் பெயர் :..............................
கற்கும் பாடசாலை :..............................
கற்கும் தரம் :..............................
வீட்டு முகவரி :..............................
பிறந்த திகதி :..............................
ஆர்வமுள்ள துறைகள் :..............................
:..............................

.................. திகதி
.................. ஒப்பம்

.................. அதிபர்/ஆசிரியர் ஒப்பம்
.................. பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்

# ஜே.எம்.கோட்ஸி



உலகின் இருண்ட கண்டமான ஆபிரிக்க மண்ணிலிருந்து வந்த இலக்கியங்கள் கறுப்பு இலக்கியங்கள் என அழைக்கப்பட்டன. இலக்கியத்திற்கான சென்ற ஆண்டு நோபல் பரிசு தென்னாபிரிக்க எழுத்தாளர் ஜே.எம். கோட்ஸிக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நாடின் கார்டிமர், நாகுப ம.ஃபாஸ், வோல் சொயின்கா ஆகிய ஆபிரிக்க நாட்டவர்களைத் தொடர்ந்து, ஜே.எம்.கோட்ஸி இந்த விருதைப் பெறும் நான்காவது கறுப்பின எழுத்தாளர்.

தென்னாபிரிக்காவின் கேப்டவுன் நகரில் 1940 மாசி 9 ஆம் திகதி பிறந்தார். இளமைக்காலம் ஆங்கிலம், ஜேர்மன் என்ற இரு மொழி பின்புலத்தில் உருவானது. இவரது தந்தை அரசாங்கத்தில் பணியாற்றி, அரசுடன் ஒத்துப்போக முடியாததால், வேலையை இழந்தார். சுதந்திரமான மனப்போக்கு கொண்ட இவர் - கோட்ஸியை ஒருவித ஆங்கிலத் தன்மையுடன் வளர்த்தார். கோட்ஸியின் சுயசரிதமான **Boy Hoods** இல் அவரது உடல் நலமற்ற இளமைக்காலமும் வீட்டில் முடங்கி தனிமையிலிருந்தபோது, புத்தகங்களைத் துணையாகக் கொண்டதும் விபரிக்கப்படுகின்றது. தென்னாபிரிக்க இனவெறி அரசியல் இவரது மனதில் எதிர்ப்பின் விதைகளைத்தூவின. கேப்டவுன் பல்கலைக் கழகத்தில் கணிதமும், ஆங்கிலமும் பயின்ற கோட்ஸி தந்தையின் மேலாதிக்கத்தின் மேல் கடும் வெறுப்புணர்வு கொண்டார். இதிலிருந்து விடுபட தன்னைத்தானே நாடுகடத்திக் கொள்பவராய், கணினி புரோக்கிராமிங் பயின்று லண்டனுக்குச் சென்றார். லண்டனிலும் அதன் அண்டை நகரங்களிலும் கடும் மனப்போராட்டங்களுக்கிடையே பணியாற்றினார். இங்குதான் அவரது இலக்கிய ஆளுமை உருப்பெறத் தொடங்கியது. பிறகு ஆஸ்டினில் உள்ள டெக்ஸாஸ் பல்கலைக்கழகத்தில் பெக்கட்டின் எழுத்துக்களை ஆய்வுசெய்து டாக்டர் பட்டம் பெற்றார்.

சிறிது காலம் கல்லூரி பேராசிரியராகப் பணியாற்றிவிட்டு, பிறகு அமெரிக்கா சென்றார். அங்கு **Baffalore** நகரில் ஆசிரியராகப் பணியாற்றினார். அப்போது அவர் எழுதிய இரட்டைக்கிளைக் கதையான 'டஸ்லேன்சில்' அமெரிக்க, வியட்நாம் போர்ச் சூழலும் தென்னாபிரிக்க நிலப்பகுதி முதன் முதலாக கண்டுபிடிக்கப்பட்டதும், பின்புலமாக சித்தரிக்கப்படுகின்றன. பின்னர் தாய் நாடு திரும்பிய கோட்ஸி கேப்டவுன் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கிய அசிரியராக வேலைக்குச் சேர்ந்தார். இனவெறி பாகுபாடு உச்சத்திலிருந்த அந்த நாளில் அந்தப் பல்கலைக்கழகம் வெள்ளையருக்கு மட்டுமானதாக இருந்தது. கோட்ஸி 2002 இல் பேராசிரியர் பணியை உதறிவிட்டு அவுஸ்ரேலியாவுக்குச் சென்றார். இப்போது அங்குள்ள அடிலைட் பல்கலைக்கழகத்தில் பணியாற்றி வருகிறார்.

அவுஸ்ரேலியா புறப்படும் முன்பே கோட்ஸி பல புகழ்பெற்ற நாவல்களை எழுதிவிட்டார். இவற்றில் இரண்டு புக்கர் பரிசு பெற்றவை. அவையாவன **The life and times of michel k disgrace,** தான் வாழுமிடத்தை, நாட்டைத் துறந்து செல்வது கோட்ஸிக்கு எப்பொழுதும் வேதனை மிகுந்த ஓர் அனுபவம். இவரது முதல் திருமணம் 1980 இல் முறிந்தது. தனிமை விரும்பியான கோட்ஸி பெரும்பாலும் பத்திரிகையாளர்களைத் தவிர்த்து வந்திருக்கிறார். தனக்கு அளிக்கப்பட்ட புக்கர் பரிசுகளைக் கூட பெற்றுக்கொள்ள அவர் செல்லவில்லை.

கோட்ஸியின் எழுத்துக்கள் வழக்கமான வழிமுறைகளை உடைத்து எறிவதாகவும், ஒப்பிட இயலாததாகவும் கருதப்படுகின்றன. ☆

## பொது அறிவுத் தகவல்

- யூரோ நாணயத்துக்கான முதலீட்டு விருதை இலங்கை முதலீட்டுசபை பெற்றுள்ளது.
- இலங்கையின் முதலாவது சமாதானக் கிராமம் பொலநறுவை பில்லம்பிட்டியாவில் அமைக்கப்பட்டுள்ளது.
- இலங்கையின் 12 வது நாடாளுமன்றம் 2004 பெப்ரவரி 7 இல் கலைக்கப்பட்டது. புதிய நாடாளுமன்றம் 2004 ஏப்ரல் 22 இல் கூட்டப்பட்டது.
- 2006 உலகக் கிண்ண கால்பந்தாட்டம் ஜேர்மனியில் நடைபெறவுள்ளது.
- 13 டிசம்பர் 2003 இல் ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் பதுங்கு குழியில் வைத்து அமெரிக்கப் படைகளால் கைதுசெய்யப்பட்டார். இவர் 24 வருடங்கள் ஈராக்கின் சக்திவாய்ந்த சர்வாதிகாரியாக ஆண்டுவந்தார்.
- 26-12-2003 இல் பாரிய பூமியதிர்ச்சி ஈரானின் பாம் நகரில் ஏற்பட்டது. ஏறத்தாழ 5000 உயிர்களை இது பலிகொண்டது. இதே ஆண்டில் அமெரிக்காவின் கலிபோர்னியாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் 2000 பேர் வரை கொல்லப்பட்டனர்.
- அண்மையில் சீனாவில் ஏற்பட்ட விசவாயுக்கசிவினால் 300 றகும் மேற்பட்டோர் உயிரிழந்தனர்.
- அடுத்த சார்க் மாநாடு பங்களாதேசின் தலைநகர் டாக்காவில் நடைபெறவுள்ளது.
- அணிசேரா நாடுகளின் மாநாடு 2003 - மலேசியாவில் நடைபெற்றது.
- அண்மையில் பறவைக்காய்ச்சல் (Bird fever) நோய் தாய்லாந்தில் பரவ ஆரம்பித்துள்ளது.
- 2003 ஒகஸ்ட் 16 இல் உகண்டாவின் சர்வாதிகாரி இடிஅமீன் கோமா நிலையில் மரணமானார்.
- இலங்கையின் தற்போதைய பொலிஸ்மா அதிபராக இந்திர டி சில்வா உள்ளார்.

## உலக ஒலிம்பிக்



☆ சுமார் 2000 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கிரேக்க மக்கள் ஒலிம்பியா என்ற சமவெளியில் நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை விழா எடுத்தார்கள். இதுவே பின்னர் ஒலிம்பிக் ஆட்டங்களாக பரிணமித்தன.

☆ கி.பி. 394 இல் ரோம் மன்னனால் இது தடைசெய்யப்பட்டு அன்றுமுதல் 1500 ஆண்டுகள் இந்த ஒலிம்பிக் நடைபெறாமல் நின்றுவிட்டது. 1878 இல் தொல்பொருள் ஆய்வாளர்கள் ஒலிம்பிக் ஆட்டங்கள் நடைபெற்று வந்த பண்டைக்கால விளையாட்டு அரங்கொன்றை அகழ்ந்து எடுத்தார்கள்.

☆ இதைத் தொடர்ந்து ஒலிம்பிக் ஆட்டங்களைப் புதுப்பிக்க வேண்டுமென ஒரு இயக்கம் தோன்றி 1894 இல் சர்வதேச மாநாடு ஒன்று நடத்தப்பட்டு 'ஒலிம்பிக் ஆட்டக்குழு' (**International Olympic Commitee - IOC**) அமைக்கப்பட்டது.

☆ இந்தக் காலத்து ஒலிம்பிக் ஆட்டத்தின் முதல் விழா 1896 இல் கிரேக்க நாட்டிலுள்ள எதென்ஸ் நகரில் நடத்தப்பட்டது. அன்று முதல் வெவ்வேறு நாடுகளில் ஆண்டுக்கு ஒருமுறை ஒலிம்பிக் ஆட்டங்கள் நடைபெற்று வருகின்றன. ஒலிம்பிக்கின் சின்னம் இணைந்த ஐந்து நிற வளையங்களுமே ஆகும். இது ஒலிம்பிக்கில் கலந்துகொள்கின்ற ஐந்து கண்டங்களையும் குறிக்கும்.

☆ இன்னும் விரைவாக, இன்னும் உயர்வாக, இன்னும் சக்தியாக (**Citius, Altius, Fortius**) இதுவே ஒலிம்பிக்கின் தாரக மந்திரமாகும்.

☆ 1916, 1940, 1944 இல் உலக யுத்தம் காரணமாக இவை நடைபெறவில்லை. 1980 - 2003 வரை **IOC** தலைவர் ஜியோல் அன்டணியோ சமராஞ் என்பவராவார்.

☆ 2004 சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டுக்கள் கிரீஸின் தலைநகர் எதென்ஸில் நடைபெறவுள்ளது.

குமுதினிப்படகில்

# படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக தீவகம் முழுவதும் துக்கதினமாக அனுஷ்டிப்பு

(நெடுந்தீவு)

குமுதினிப் படகில் பயணஞ் செய்து படுகொலை செய்யப்பட்டவர்களின் 19 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன.

இந்தநிகழ்வுகளை ஒட்டி நெடுந்தீவு குறிகட்டுவான் இடையிலான குமுதினிப் படகுச் சேவை இடம்பெறமாட்டாது என்பதுடன், நெடுந்தீவுப் பகுதியில் பூரண துக்கதினமாகவும், தீவகத்தின் ஏனைய பகுதிகளிலும் துக்கதினமாகவும் இந்நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

அஞ்சலி நிகழ்வாக உரைகள் இடம்பெறவுள்ளன. நெடுநதீவுப் பங்குத் தந்தையினால் நினைவுத் திருப்பலியும் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது

நேற்றுக்காலை நினைவாலய வளாகப் பகுதிகள் சிரமதானம் பணியின் மூலமாக துப்பரவு செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

நெடுந்தீவு பொது அமைப்புக்களின் அனுசரணையுடன் நெடுந்தீவு தேசிய எழுச்சிப் பேரவையினால் இந்நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

## வீடியோ படக்காட்சி

யாழ்.பல்கலை திரைப்பட வட்டம் வழங்கி வரும் திரைப்படக் காட்சித் தொடரில் "குளோட் ஷப்ரோல்" இயக்கிய பிரெஞ்சு திரைப் படமான "இறைச்சிக் கடைக்காரன்" (LEBOUCHER) என்ற திரைப் படம் இன்று பி.ப. 3 மணிக்கு புவியியற்துறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

படத்தின் இறுதியில் எழுத்தாளர் அ.யேசுராஜா, க.சட்டநாதன் ஆகியோரின் நெறிப்படுத்தலின் கீழ் படம் பற்றிய கலந்துரையாடல் இடம் பெறவுள்ளது.

# குமுதினிப்படகு பழுதடைந்தது தொடர்பாக இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு குமுதினிப் படகு கடந்த எட்டு மாதகாலமாக சேவையில் ஈடுபட முடியாமல் பழுதடைந்த நிலையில் உள்ளது. இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபை இன்னமும் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை.

அதேவேளை, நெடுந்தீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் படகு ஒன்று இதுவரை காலமும் நெடுந்தீவு மக்களுக்கான படகுச் சேவை ஒன்றை மேற்கொண்டது.

இந்தப்படகும் முற்றாக பழுதடைந்துள்ளமையால் நெடுந்தீவு மக்களின் போக்குவரத்து சேவை முற்றாக செயலிழந்துள்ளது.

சில மீன்பிடி வள்ளங்கள் குறிகாட்டுவான் துறைமுகத்திற்கு நெடுநதீவு மக்களை ஏற்றி வந்துள்ளன.

நெடுந்தீவு மீனவர்களின் படகுகள் மக்களை ஏற்றி வந்து கொண்டிருுந்த போது ஆழ்கடலில் படகு சரிந்து ஆபத்தான சூழ்நிலை உருவாகியது.

இந்த நிலையில் படகு கரையில் கட்டி இழுத்துச் செல்லப்பட்டது. தற்போது நெடுந்தீவு மக்கள் குறிகாட்டுவான் வருவதற்கான எந்த விதமான படகுச் சேவையும் இல்லாத நிலையில் மக்கள் பெரும் பிரசசினைகளை எதிர்கொண்டு வருகின்றனர்.

இது தொடர்பாக யாழ். மாவட்ட அரச அதிபருக்கு தெரியப்படுத்தப் பட்டுள்ளது. இது தொடர்பான நடவடிக்கைகள் எதுவும் இதுவரை எடுக்கப்படவில்லை. (113)

## - கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் -
# விசர்நாய் கடித்த 269 பேருக்கு சிகிச்சை

கடந்த இருமாதங்களில் விசர் நாய் கடிக்குள்ளான 269 பேருக்கு கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் ஏ.ஆர்.வி தடுப்பூசி ஏற்றி சிகிச்சையளிக்கப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரை 168 பேர் விசர்நாய்கடியினால் பாதிக்கப்பட்டு ஏ.ஆர்.வி தடுப்பூசி ஏற்றி சென்றுள்ளனர். இதே வேளை ஏப்ரல் முதலாம் திகதி தொடக்கம் ஏப்ரல் 30 ஆம் திகதி வரை 101 பேர் ஏ.ஆர்.வி. தடுப்பு மருந்து ஏற்றிச் செனறுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (17)

# வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலைக்கு 25 ஆயிரம் ரூபா வெளிநாட்டிலிருந்து உதவி

வல்வெட்டித்துறை மாவட்ட வைததியசாலைக்கு 25000 ரூபா வெளிநாட்டிலிருந்து கிடைக்கப்பெற்றது.

சுவிஸ் நாட்டிலிருந்து ஈ. அர்சுனன் 10000 ரூபாவையும், அவுஸ்திரேலியாவிலுள்ள லலிதா பாலகிருஷ்ணன் 10,000 ரூபாவையும், கணக்காளர் எஸ். குமாரசாமி 5000 ரூபாவையும், அனுப்பி வைத்துள்ளனர் என வல்வெட்டித்துறை மாவட்ட வைத்தியசாலை மாவட்ட வைத்திய அதிகாரி க. மயிலேறும்பெருமாள் தெரிவித்தார். (17)

## காரைநகர் பிரதேச செயலக விளையாட்டுவிழா

காரைநகர் பிரதேச செயலக வருடாந்த விளையாட்டு விழா நாளை மாலை 2 மணிக்கு யா/கலாநிதி ஆ.தியாகராசா வித்தியாலய மைதானத்தில் காரைநகர் பிரதேச செயலாளர் பிரபா கந்தசாமிஐயர் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் யாழ்.மாவட்ட செயலக உதவி திட்டமிடல் பணிப்பாளர் வே. சாம்பசிவம் பிரதம விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (52)

## கும்பாபிஷேக பூர்த்தி விழா

காரைநகர் மடத்துக்கரை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் கும்பாபிஷேக பூர்த்திவிழா நாளை நடைபெறவுள்ளது. பிற்பகல் 5 மணிக்கு அலங்கரிக்கப்பட்ட பூந்தண்டிகையில் அம்பாள் வீதியுலா வரும் காட்சியும் நடைபெறும். (52)

# யாழ்-காரைநகருக்கு இடையிலான தனியார் சிற்றூர்தி சேவை இடைநிறுத்தம்

யாழ்.நகருக்கும், காரைநகருக்கும் இடையான தனியார் சிற்றூர்திச் சேவையினை தாம் காலவரையின்றி இடைநிறுத்தியுள்ளதாக யாழ். மாவட்ட தனியார் சிற்றூர்திச் சாரதிகள் தெரிவித்தனர்.

நேற்றுமுன்தினம் சுழிபுரம் பகுதியில் இடம்பெற்ற விபத்தைத் தொடாந்து காரைநகருக் கான சேவையில் ஈடுபட்ட தனியார் மினிபஸ் ஒன்று பொதுமக்களால் தீயிட்டு எரிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே தாம் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாக சாரதிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட சம்பவத்தில் ஈடுபட்டவர்களை நீதிமன்றில் ஆஜர்படுத்தி உரிய நஷ்ட ஈட்டினைப் பெற்றுத் தரும் வரை தமது போராட்டம் தொடருமென அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

## வருடாந்த மஹோற்சவம்

அளவெட்டி கும்பழாவளை பிள்ளையார் கோவில் வருடாந்த மஹோறசவம் எதிர்வரும் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. கொடியேற்ற நிகழ்வை தொடர்ந்து பத்து நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று தேர், தீர்த்தம் என்பனவும் நடைபெறும்.

திருவிழா காலங்களின்போது இரவு வேளைகளில் கலை நிகழ்வுகளும் நடைபெறவுள்ளது. (94)

# - அனுமதிப் பத்திரமின்றி -
# மதுபானம் விற்பனை செய்த இருவரை குற்றப்பணம் செலுத்துமாறு நீதிவான் உத்தரவு

(யாழ்ப்பாணம்)

அனுமதிப் பத்திரமின்றி மதுபானம் விற்ற இருவரைக் குற்றப் பணம் செலுத்துமாறு யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

யாழ்ப்பாணம் நக்கா வீதியைச் சேர்ந்த ஒருவரும் மற்றும் பூநாறி மரத்தடி லேன், கொக்குவிலைச் சேர்ந்த இன்னொருவருமே யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட போது இருவரையும் தலா 3000 ரூபாவைக் குற்றப் பணமாகவும், தலா 2000 ரூபாவை தர்மப் பணமாக விழிப்புலனற்றோர் இல்லத்திற்கும் வழங்குமாறு உத்தரவிடப்பட்டது.

இதேசமயம் சட்டவிரோதமாக $10^1/2$ லீற்றர் கோடாவினை வைத்திருந்த பெண் ஒருவருக்கும், $1^1/2$ லீற்றர் வடிசாராயத்தை வைத்திருந்த பெண் ஒருவருக்கும் தலா 15000 ரூபாவினைக் குற்றப்பணமாகவும், 5000 ரூபாவினை தர்மப் பணமாகவும் செலுத்துமாறு யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரீ.விக்னராஜா உத்தரவிட்டார்.

யாழ்ப்பாண மதுவரிப் பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் குற்றவாளிகளான ஆனைக்கோட்டை 3 ஆம் கட்டையைச் சேர்ந்த பெண் ஒருவரும் மற்றும் வெள்ளாந்தெரு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இன்னொரு பெண்ணுக்கும் யாழ். நீதிமன்றம் மேற்படி தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்தது.

# சீர் இணுவை திருவூர் நூல் வெளியீட்டு விழா

"சீர் இணுவைத் திருவூர்" எனும் நூல் வெளியீட்டு விழா இன்று நடைபெறவுள்ளது. இணுவில் சைவத்திருநெறிக்கழக அறநெறிப் பாடசாலையின் ஏழாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளியிடப்படும் இந்த நூலானது இணுவில் கிராமத்தின் வரலாற்றை கூறுவதாக அமைந்துள்ளது.

இன்று மாலை 3 மணிக்கு இணுவில் சிவகாமி அம்மன் கோவில் அன்னதான மண்டபத்தில் இணுவில் சைவத்திருநெறிக் கழகத் தலைவர் கெ.தவராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் சைவப் பெரியார்களின் திருவுருவப்படங்களும் திரை நீக்கம் செய்து வைக்கப்படவுள்ளன.

இன்றைய நிகழ்வில் தொடக்கவுரையை ஆசிரியர் ஆறு.திருமுருகன் நிகழ்த்தவுள்ளதுடன் நூலுக்கான வெளியீட்டுரையை கலாநிதி எஸ்.சிவலிங்கராசாவும், ஆய்வுரைகளை கலாநிதி மனோன்மணி சண்முகதாசும், கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை விரிவுரையாளர் கலாநிதி செ.திருநாவுக்கரசுவும் நிழ்த்தவுள்ளனர்.

நூல் வெளியீட்டுவிழா நிறைவு பெற்றதும் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (94)

## கூட்டுறவுச் சங்க பொதுக்கூட்டம்

கைதடி பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பொதுக்கூட்டம் நாளை காலை 10 மணிக்கு தலைவர் சி.சுப்பிரமணியம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் யாழ்.மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதியும் கூட்டுறவுப் பொறுப்பாளர் பொ.புஸ்பகுமாரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

# வறாத்துப்பளையின் சில பகுதி மக்கள் பாவனைக்கு கையளிப்பு!

பருத்தித்துறை வறாத்துப்பளைப் பகுதியிலுள்ள வெடி பொருள் அகற்றப்பட்ட பகுதி பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் கையளிக்கப்பட்டது.

பருத்தித்துறை சமூகசேவை உத்தியோகத்தரான ராஜ்குமாரிடம் டெனிஸ் வெடிபொருள் அகற்றும் பிரிவின் அந்தப் பிரதேச பொறுப்பதிகாரி சாமுவேல் பொனிலாவால் கையளிக்கப்பட்டது.

வெடிபொருள் அகற்றப்பட்ட 11 ஆயிரத்து 886 சதுரஅடி பரப்பளவு கொண்ட பகுதியே கடந்த திங்கட்கிழமை மக்கள் பாவனைக்காக விடப்பட்டது.

வறாத்துப்பளை பகுதி கிராமசேவையாளர் சிவசண்முகன் தலைமையில் நடைபெறற இந்த நிகழ்வில், யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடிச் செயறபாட்டு அலுவலகத்தைச் சேர்ந்த ம.செந்தில்குமாரும் கலந்துகொண்டார்.(ப)

# விஞ்ஞான வாரத்தின் இறுதிநாள் நிகழ்வு இன்று!

யாழ்.பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்களால் நடாத்தப்பட்ட விஞ்ஞான வார நிகழ்வுகளின் இறுதி நாள் நிகழ்வுகள் இன்று நடைபெறவுள்ளன. விஞ்ஞானபீட மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.நவரூபன் தலைமையில் கைலாசபதி கலையரங்கில் இன்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும். இந்த நிகழ்வில் விஞ்ஞான வாரத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விளையாட்டு மற்றும் கலாசார போட்டிகளில் பரிசுபெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும் இடம் பெறவுள்ளது.

நிகழ்வில் - கலாசார போட்டிகளில வெற்றிபெற்ற மாணவர்களின் பட்டிமன்றம், நாடகம், கவியரங்கம், நடனம் என்பன இடம்பெறவுள்ள மையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (94)

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் பிற்போடப்பட்டுள்ளது

தென்மராட்சி பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் எதிர்வரும் 21 ஆம் திகதி பிரதேச செயலக மண்டபத்தில் இடம் பெறும். 17 ஆம் திகதி இக் கூட்டம் இடமபெறுமென முன்னர் அறி விக்கபட்டபோதும் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப் பட்டுள்ளதாக பிரதேச செயலர் அறிவிததுள்ளார். இக்கூட்டத்தில் அரச, அரசசார்பற்ற நிறுவனங் களில் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். (24)



புதிதாகப் பயிற்றப்பட்டு உருவாக்கப்பட்ட மக்கள் நலன்புரிச் சங்கப் படையணிகளின் பான்ட் வாத்திய அணியினரையும், சங்க நிர்வாகிகளையும் படத்தில் காணலாம். (111)

# கல்வி பொதுத் தராதரப் பத்திர (உ/த) 2004

## வரலாறு I

## மாதிரி வினாத்தாள்

1 - தொடக்கம் 10 வரையான வினாக்களில் பொருத்தமற்ற விடையைத் தெரிவுசெய்து அதன் இலக்கத்தை அடைப்புக்குள் இடுக.

1. (1) பருமக (2)கபதி (3)கமிக (4)ரட்டிக (5)அகலகச ( )
2. (1)மாகம (2)மாபடு (3)மகாவொடி (4)மாந்தோட்டம் (5)மாந்தை ( )
3. (1)அரிட்குமார (2)பண்டுகஉபாஸக (3)மல்லகணக (4)பிராமணதிஸ்ஸ (5)பிராமண தாலிபவ்வத ( )
4. (1)வலகம்பா (2)துட்டகாமினி (3)விஜயபாகு (4)அசேல (5)தேவநம்பியதீஸன் ( )
5. (1)சங்கமித்தா (2)அனுலா (3)சுகலா (4)மித்தா (5)இரத்னாவலி ( )
6. (1) தம்மன்னாவ (2)யாழ்ப்பாணம் (3)விஜிதகம (4)அனுராதகம (5)உபதிஸ்ஸகம ( )
7. (1)தீக்காயு (2)விஜித (3)றோசன (4)இறாமை (5)வச்சிர ( )
8. (1)கரிவம்சம் (2)தீபவம்சம் (3)மகாவம்சம் (4)தூபவம்சம் (5)தாதுவம்சம் ( )
9. (1)கல்யாணவதி (2)விகாராமாதேவி (3)இரனாவரி (4)சுமித்ராதேவி (5)சுனேத்ராதேவி ( )
10. (1)சத்தாமல (2)அசத்தாமல (3)தாமிய (4)சூரியபாகிய (5)விஜயபாகிய ( )

11 - 15 வரையுள்ள வினாக்களில் X நிரலில் உள்ளவற்றுடன் Y நிரலில் உள்ளவற்றைப் பொருத்தி சரியான விடை ஒழுங்கை அடைப்புக்குள் இடுக.

| | X | Y |
|---|---|---|
| 11. | (1)விஜயபாகு பிரிவென | A.தெவிநுவர |
| | (2)இருகல்குலதிலக்க பிரிவென | B.காரகல |
| | (3)பத்மாவதி பிரிவென | C.பெப்பிலியான |
| | (4)ஶ்ரீகணானந்த பிரிவென | D.ரயிகம |
| | (5)சுனேத்ராதேவி பிரிவென | E.தொட்டகமுவ |

(1) BEDAC (2)EABDC (3)BACDE (4)BEDCA (5)BDECA ( )

| | X | Y |
|---|---|---|
| 12. | (1)வில்மற்ஹோட்டன் | A.சிங்கள முஸ்லிம்கலகம் |
| | (2)எட்வர்ட் பாண்ஸ் | B.கோல்புறூக் - கமரன் சீர்திருத்தம் |
| | (3)ஹென்றி | C.இலங்கையின் கடைசிப் பிரித்தானியன் |
| | (4)றொபர்ட் சாமர்ஸ் | D.கொழும்பு கண்டி நெடுஞ்சாலை |
| | (5)ஹென்றி மொங்கரேகன் மூர் | E.அரசியலமைப்புச் சீர்திருத்தம் |

(1) BADCE (2)BACDE (3)BCADE (4)BDEAC (5)BEDAC ( )

| | X | Y |
|---|---|---|
| 13. | (1)தீஸன் | A.அபயகிரி |
| | (2)பண்டுகாயன் | B.பண்டுவ |
| | (3)துட்டகைமுனு | C.ருவான்வெலிசாயா |
| | (4)மகாசேனன் | D.மின்னேரியா |
| | (5)வட்டகாமினி | E.மகாவிகாரை |

(1) EBCDA (2)EDCBA (3)EBCAD (4)DCBAE (5)DBCAE ( )

| | X | Y |
|---|---|---|
| 14. | (1)1815 | A.மனிங்சீர்திருத்தம் |
| | (2)1848 | B.கண்டி ஒப்பந்தம் |
| | (3)1915 | C.மக்கலம் சீர்திருத்தம் |
| | ( 4)1910 | D.கண்டிக்கலகம் |
| | (5)1924 | E.சிங்கள முஸ்லிம் கலகம் |

(1) BDEAC (2)BDECA (3)ABCED (4)BDCEA (5)BDACE ( )

| | X | Y |
|---|---|---|
| 15. | (1)அடக | A.தனாதிகாரி |
| | (2)புரோகிதர் | B.வரி அறவிடுபவன் |
| | (3)டோவாரிக | C.வழிபாடியற்றுவோன் |
| | (4)கணக்கர் | D.நீதிபரிபாலகர் |
| | (5)படகாரிக | E.வாயில் காவலன் |

(1) BDEAC (2)BDECA (3)ECABD (4)ACBDE (5)ECBA ( )

16- 20 வரையான வினாக்களுக்கு சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.

16. இலங்கையில் மகாஜன பௌத்தத்தைப் பரப்பியவன் பண்டுகாபயனாவான் (..........)
17. விஜயனின் தோழர்களில் பிராமணரும் இருந்தனர் (..........)
18. தேர்தல் முறையை இலங்கையில் அறிமுகப்படுத்தியவர் டொனமூர் (..........)
19. விஜயபாகுவின் மனைவியருள் ஒருத்தி சிவலோக சுந்தரியாவாள் (..........)
20. பெருந்தோட்டப் பயிர்ச்செய்கை விருத்தியால் இலங்கையில் முதலாளித்துவம் வளர்ந்தது (..........)

21 - 25 வரையான வினாக்களுக்கு புள்ளிக்கோட்டில் விடை எழுதுக.

21. தந்துறேயுத்தம் யார் யாருக்கிடையில் நடந்தது ..........
22. டொனமூர் யாப்பு அறிமுகப்படுத்தப்பட்டவேளை, இலங்கையில் ஆழ்பதியாக இருந்தவர் யார்? ..........
23. ஒல்லாந்தரது நீதி பரிபாலன அமைப்பு எது? ..........
24. கண்டியைக் கைப்பற்றிய பிரித்தானிய ஆழ்பதி யார்? ..........
25. இலங்கை வந்த முதலாவது பிரித்தானியன் யார்? ..........

26 - 30 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் இலக்கத்தை அடைப்புக்குள் இடுக

26. ஆறாம் பராக்கிரமபாகுவின் சாதனைகளுள் ஒன்று
(1)சந்திரானுவைத் தோற்கடித்தமை
(2)பாண்டியரைத் தோற்கடித்தமை
(3)கலிங்கரை வென்றமை
(4)கோட்டையை கைப்பற்றியமை
(5)இலங்கையை ஐக்கியப்படுத்தியமை ( )

27. இலங்கையில் போர்த்துக்கேயரது நிர்வாகம் தொடர்பாக எழுதிய போத்துக்கேய பாதிரியார் யார்?
(1)றொபேட்நொக்ஸ் (2)குவைறோஸ் (3)ஜேம்ஸ் (4)மார்க்கஸ் (5)கிறிஸ்தோபர் ( )

28. இலங்கையின் இரட்டையாட்சி இடம்பெற்ற காலம்
(1)1997-1998 (2) 1798-1799 (3)1798-1802 (4)1799-1802 ( )

29. இலங்கைத்தேசிய காங்கிரஸின் முதலாவது தலைவர்
(1)பொன்னம்பலம் இராமநாதன் (2)சேர் வைத்திலிங்கம் (3)அப்துல்லாதர் (4)செனநாயக்கா (5)பொன்னம்பலம் அருணாசலம் ( )

30. பண்டுவாசுதேச வந்திறங்கிய துறைமுகம்
(1)மாந்தை (2)கோகர்ண (3)ஜம்புகோளம் (4)உறாதோட்ட (5)காலி ( )

31 - 35 வரையான வினாக்களுள் கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களை அடிப்படை யாகக்கொண்டு விடை தருக

இங்கு கொடுக்கப்பட்டுள்ள கூற்றுக்களில் A யும் B யும் சரியாயின் (1) எனவும், B யும் C யும் சரியாயின் (2) எனவும், C யும் D யும் சரியாயின் (3) எனவும், A யும் D யும் சரியாயின் (4) எனவும், ஒரு விடையோ அல்லது இரண்டிற்கு மேற்பட்டவையோ சரியாக இருப்பின் 5 எனவும் அடைப்புக்குள் இடுக.

31. இலங்கையின் புவியில் பின்னணி பற்றியதில் சரியானது எது?
A .உலகின் மிகப்பெரியதும் பாதுகாப்பானதுமான இயற்கைத் துறைமுகம் திருகோணமலைத் துறைமுகம்.
B .இலங்கைத் தீவு தோடம்பழ வடிவையுடையது.
C .இலங்கையின் தென்மத்திய பிரதேசம் அதிகமலைகளைக் கொண்டுள்ளது.
D .நாட்டின் தாழ்நில ஈரவலயம் வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் பெறுகிறது. ( )

32. மன்னன் துட்டகாமினி ஆட்சிக்கால முடிவு வரையுள்ள உருகுணையில் வரலாறு தொடர்பான சாயான கூற்றுக்கள் எவை?
A. மகாநாகன் மகாகமவில் தன்னை நிலைநிறுத்திக்கொண்டான்.
B. மன்னன் கோதாபயன் ஆட்சியின்போது உருகுணையில் இரு சத்திரியக் குடும்பங்களுக்கிடையே கைகலப்பு இடம்பெற்றது.
C. கோதாபயன் அமைதியான முறையில் உருகுணையை ஒன்றுபடுத்தினான்.
D. துட்டகை காமினி சத்தாதிஸ்ஸனை அளுகுணாப் பிற்றியவில் தோற்கடித்தான். ( )

33. பண்டைய இலங்கையின் வர்த்தகம் தொடர்பாக கூறக்கூடிய சரியான கருத்து.
A. இலங்கைக்கு உலகின் பிறபாகங்களுடன் வர்த்தகப் பாதைகள் இருக்கவில்லை.
B. அநுராதபுரத்தில் நான்கு வாயில்களிலும் வியாபார மத்திய நிலையங்கள் இருந்தன.
C. இலங்கையில் மீட்கப்பட்ட புராதன நாணயங்கள் புராணகால நாணயங்களாகும்.
D. பண்டைய பிராமி எழுத்துக்களில் வணிகம் பற்றிக் குறிப்பிடப்படவில்லை. ( )

34. 1848 கலகம் தொடர்பான கூற்றுக்களில் சரியானதெனக் கருதப்படுவது?
A. கலகத்துக்குக் தலைமை வகித்தவன் கெப்பிற்றிப் பொலாவ
B. புதிய வரி விதிப்புக் கொள்கையே கலகத்திற்கான உடனடிக் காரணமாகும்.
C. ஹெட்டன் ஆழ்பதியாக இருந்தபோது கலகம் நடைபெற்றது.
D. இக்கலகம் கரையோரத்திற்குப் பரவியது. ( )

35. 1766 ஆம் ஆண்டு உடன்படிக்கை தொடர்பாகப் பின்வருவனவற்றில் சரியானது, சரியானவை?
A. 2 ஆம் இராஜசிங்கனுக்கும் ஒல்லாந்தருக்குமிடையே நடந்தது.
B. ஒல்லாந்தர் கரையோரப்பிரதே சங்களில் இருந்து போர்த்துக்கேயரை வெளியேற்ற உறுதியளித்தனர்.
C. கண்டி மன்னன் கரையோரப் பகுதிகளை ஒல்லாந்தர்களுக்கு அளிக்க இணக்கம் தெரிவித்தான்.
D. பிரித்தானிய தளபதிக்கும், முதலாம் விமதர்ம சூரியனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையாகும். ( )

36 - 40 வரையுள்ள வினாக்களுக்கு ஒவ்வொரு வினாவிலும் இரண்டு கூற்றுக்கள் மூலம் தரப்பட்டுள்ளன. அவ்விரு வினாக்களுக்கும் தரப்பட்டுள்ள அட்டவணையில் உள்ள (1), (2), (3), (4) என்பவற்றின் சோடிக் கூற் றுக்களுக்குப் பொருத்தமான சோடியைத் தெரிவுசெய்து அதன் இலக் கத்தை அடைப்புக்குள் எழுதுக.

| | முதலாம் கூற்று. | இரண்டாம் கூற்று. |
|---|---|---|
| 1 | சரியானது. | சரியானது |
| 2 | சரியானது. | பிழையானது |
| 3 | பிழையானது. | சரியானது |
| 4 | பிழையானது. | பிழையானது |

| கூற்று - 1 | கூற்று - 2 |
|---|---|
| 36. இலங்கையில் பௌத் தம் பரப் பப் பட வேண் டுமானால் தேவநம்பிய தீஸன் கட்டாய மதமாற்றம் செய்யப்பட வேண் டும் என அசோகன் கூறினான். | மகிந் ததேரரால் அனுலா பிக்குணி ஆக்கப்பட்டால். ( ) |
| 37. இலங்கை வரலாற்றை ஆதி தொடக்கம் தருவது தீப வம்சமாகும். | சூளவம்சம் தீபவம்சத்தின் தொடர்ச்சியாகம். ( ) |
| 38. பண்டைய இலங்கை யின் அரச சபையில் சேனாதி பதி முக்கியத்துவம் பெற்றான். | சேனாதிபதியாக அரசனின் உறவினர்களே நியமிக்கப் பட்டனர் ( ) |
| 39. சூரதிஸன் காலத்தில் எல்லாளன் அநுராதபுரம் வந் தான். | எல்லாளன் 22 வருடங்கள் இலங்கையில் ஆட்சி புரிந்தான். ( ) |
| 40. காசியப்பன் தனது தந்தையாகிய தாதுசேன னைக் கொலைசெய்தான். | காசியப்பன் சிகிரியாவை தனது அரண் மனையாக்கி அழகுபடுத்தினான். ( ) |

(தொடரும்...)

M.பத்மராஜ் B.A. (Hons) His. spl

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து*
*இயற்கை அறிந்து செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## நம்பிக்கையும், அவநம்பிக்கையும்..!

மீண்டும் சமாதான பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கன அரசின் நகர்வு முயற்சிகளின் வேகம் ஒரு புறத்தில் சந்தேகங்கள் பலவற்றை ஏற்படுத்தினாலும், இன்னொரு வகையில் பிரச்சினையின் அவசியத்தை உணர்ந்து கொண்டு சர்ச்சைக்குரியதான சில விடயங்களில் காலதாமதமின்றி உடனடியாக பொருத்தமான தீர்மானங்களை எடுத்து, அதனை சமாதான ஏற்பாட்டாளர்கள் மூலம் விடுதலைப்புலிகளின் தலைமைப்பீடத்தின் பரிசீலனைக்கு அனுப்பிவைக்கும் தன்மையை நோக்கும்போது நம்பிக்கை தரும் சமிக்ஞைகளைத் தருவதாகவும் உள்ளது.

இதனை சூசகமாகத் தெரிவித்துள்ள விடுதலைப் புலிகளின் மதியுரைஞரும், தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்கள், "இதுவரை மேற்கொள்ளப் பட்டுள்ள அரசுடனான தொடர்புகளில் தீர்க்கமான முடிவுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. எனினும் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான சில அடிப்படை பிரச்சினைகளை நாம் எழுப்பியிருந்தோம். அநேகமான பிரச்சினைகளுக்கு அரசு தெரிவித்துள்ள முடிவுகள் எமக்குத் திருப்தியளிப்பதாக உள்ளன" என்று கூறியுள்ளமையானது. இருண்ட வீட்டில் ஒரு மெழுகுதிரிச் சுடரென நம்பிக்கை தருவதாக உள்ளது.

இது தொடர்பாக விரிவாகவும் விளக்கமாகவும் இப்போதைக்கு உடனடியாக எதுவும் கூறமுடியாதெனவும் ஒட்டுமொத்தமாக பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கான முன் முயற்சிகள் மிகவும் நம்பிக்கையும், திருப்தியும் தருவதாகவே உள்ளதென்றும், அவர் கூறியுள்ளதை கவனத்தில் கொண்டு பார்த்தால் அரசதரப்பு இவ்விடயத்தில் ஒரு உறுதியான செயற்பாட்டிற்கான நிலைப்பாட்டினை எடுத்துள்ளது என்றே எண்ணத் தோன்றுகின்றது.

பேச்சுக்களை எங்கே எப்போது நடத்துவது என்பது குறித்து இன்னும் ஓரிரு தினங்களில் இறுதி முடிவு காணப்படும் என்று பாலசிங்கம் அவர்கள் குறிப்பிட்டதை கவனத்திலெடுத்துப் பார்த்தால் அரசாங்கம் ஏற்கனவே விடுதலைப்புலிகள் முன்வைத்த யோசனைகளை சாதகமான முறையில் பரிசீலித்துள்ளது என்றே நம்பத் தோன்றுகின்றது.

- தமிழர்களின் ஏகப்பிரதிநிதிகளாக விடுத்லைப்புலிகளை அங்கீகரித்தல்
- இடைக்கால நிர்வாக அதிகாரசபை தொடர்பாக விட்ட இடத்திலிருந்து பேச்சுக்களை ஆரம்பித்தல்
- பேச்சுவார்த்தைகள் யாவும் இலங்கைக்கு வெளியாலேயே நடத்தப்படுதல்

போன்ற முக்கிய விடுதலைப்புலிகளின் நியாயமான யோசனைகளை அரசு கவனமாகப் பரிசீலித்து அதற்குச் சாதகமான வகையில் பதிலை தெரவித்துள்ளதன் காரணமாகவே பாலசிங்கம் அவர்களின் பேச்சில் ஒரு நம்பிக்கைத் தொனியை உணரக்கூடியதாகவுள்ளது என்ற முடிவுக்கு வரலாம் என்றே தோன்றுகின்றது.

என்றாலும், இந்த நம்பிக்கைத் தொனியை மட்டும் வைத்துக்கொண்டு பேச்சுவார்த்தைகளில் அரசு முழுவதும் விசுவாசமாகவும், நியாயமாகவும் நடந்துகொள்ளும் என்ற தீர்மானத்திற்கு எவரும் வந்துவிடமுடியாது. கடந்த காலங்களில் பேச்சுவார்த்தைகள் ஒவ்வொன்றினதும் ஆரம்பத்தில் பரந்த மனப்பான்மையுடன் கலந்து கொள்வதாக காட்டிக்கொண்டு நாட்டு மக்களையும், சர்வதேசத்தையும் நம்பவைத்த பேரினவாத அரசு பின்னர் பேச்சுவார்த்தைகளில் முக்கிய விடயங்கள் குறித்து விவாதித்து முடிவெடுக்க வேண்டிய கட்டங்கள் ஏற்பட்ட வேளைகளில் எவ்வாறு தமது சுயரூபங்களை வெளிப்படுத்தி தமிழ் மக்களை ஏமாற்ற முயன்றதுடன் பேச்சுவார்த்தைகள் குழம்புவதற்குக் காரணமாகினர் என்பதை வரலாறு அழுத்தமாகப் பதிவு செய்தேயுள்ளது.

இந்த அரசுதான் இதற்கு முன்னர் பதவி வகித்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கம் மேற்கொண்ட பேச்சுவார்த்தை நகர்வினை கடுமையாக எதிர்த்து விமர்சித்ததுடன், அது குழம்புவதற்கு மட்டடுமல்ல அந்த ஆட்சியே கலைக்கப்பட காரணமாகின என்பது குறிப்பிடத்தக்கது. இன்று அதே அரசு விட்ட இடத்திலிருந்து பேச்சுவார்த்தையைத் தொடர இப்போது இவர்கள் சம்மதம் தெரிவிக்கின்றார்கள் என்றால் அந்த அரசின் முயற்சிக்கு அப்போதே ஆதரவு தெரிவித்து சமாதான முயற்சிகளை முன்னெடுக்க உதவ மறுத்தது ஏன் என்ற கேள்வி எழவே செய்கிறது.

ஏதோ ஒரு அரசியல் உள்நோக்கம் இல்லாமல் புதிய அரசு சமாதாஎ முயற்சிகளுக்கு தனது கொள்கைகள், இயல்புகளைக் கைவிட்டு ஒரு சில வாரங்களுக்குள்ளேயே புனிதத்துவம் அடைந்து அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள முன்வருதல் சாத்தியமா?

- நன்கு யோசிக்க வைக்கும் வினாவாகவே இது உள்ளது.
- 'நம்ப நட, நம்பி நடவாதே ' என்ற பழமொழிப் பொன்மொழியே இக்கட்டத்தில் நினைவுக்கு வருகிறது.
- தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் இது வரை காலமும் சிங்கள அரசுகளின் சமாதான அழைப்பினை நம்பி ஏமாந்த அனுபவம் என்பது அவர்களுக்கு எப்போதும் எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய மனோநிலையை அளித்துள்ளது என்றே கூறவேண்டும்.
- புதிய சமாதான நகர்வு எப்படியான முடிவுகளை நோக்கி முன்னேறப் போகின்றது?
- அடுத்து வரும் மாதங்களில் இதற்கான விடை தெரிந்துவிடும்.

## நாடும் நடப்பும்




# இராணுவ புலனாய்வாளர் கொலைக்கு ஐக்கிய தேசியக் கட்சியே காரணம்

## தேசிய பிக்குகள் முன்னணி குற்றச்சாட்டு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் அண்மையில் கொல்லப்பட்ட இராணுவ புலனாய்வுத்துறை உத்தியோகத்தரின் மரணத்திற்கு ஐக்கிய தேசியக் கட்சியே காரணமென தேசிய பிக்கு கள் முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

மிலேனியம் பாதுகாப்புக் கட்டடத் தொகுதியில் இயங்கி வந்த இராணுவப் புலனாய்வு முகாம் தொடர்பான இரகசியத் தகவல்களை ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்காலத்தில் வெளியிடப்பட்டமை காரணமாகவே, புலனாய்வுப்பிரிவு தொடர்பான பல செய்திகள் விடுதலைப்புலிகளுக்கு சென்றடைந்தாகவும் தேசிய பிக்குகள் முன்ன்ணி குற்றம்சாட்டியுள்ளது.

இதன் காரணமாக இதுவரை கொல்லப்பட்ட சுமார் 50 புலனாய்வு உத்தியோகஸ்தர்களின் கொலைகளுக்கும் ஐக்கிய தேசியக் கட்சியே பொறுப்பேற்க வேண்டும்.

அத்துடன், ஐக்கிய தேசியக் கட்சியின் இத்தகைய செயற்பாடுகள் காரணமாகவே ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை பொதுமக்கள் ஆட்சிக்கு கொண்டு வந்துள்ளதாகவும் தேசிய பிக்குகள் முன்னணி குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு ஜனாதிபதி முன்வரவேண்டும் எனவும் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தேசிய பிக்குகள் முன்னணி வேண்டுகோள் விடுத்துள்ளது.

## சர்வமத சமாதான மன்றத்தின் ஏற்பாட்டில்

# மனிதநேய அமைப்புக்கள் பங்கேற்கும் மிதிவெடி ஒழித்தல் கருத்தரங்கு!

(யாழ்ப்பாணம்)

சர்வமத மன்றத்தின் ஏற்பாட்டில் இன்று யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்கள் பங்குபற்றும் மிதிவெடிகளை ஒழித்தல் எனும் தொனிப்பொருளிலான கருத்தரங்கு இடம்பெறவுள்ளது.

யாழ்.முத்திரைச் சந்தையில் அமைந்துள்ள ஈரோவில் மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்கள், யாழ்.மாவட்ட மனிதநேய அமைப்புக்கள் போன்றவை கலந்துகொள்ளவுள்ளன.

கொழும்பிலிருந்து இன்று வருகைதரும் சர்வமத சமாதான மன்றத்தைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள் இந்தக் கருத்தரங்கினை நடத்தவுள்ளனர்.

இதில் இலங்கையைப் பெரும் பொருட்செலவுக்கும், ஆபத்து நிலைக்கும் தள்ளியுள்ள மிதிவெடிகள், பொறிவெடிகள் போன்றவற்றை போரில்ஈடுபடுவோர் பயன்படுத்தாமல் இருப்பது தொடர்பாகவும், முன்னெடுக்கப்படவேண்டிய விடயங்கள் தொடர்பாகவ்ும் கலந்துரையாடப்படவுள்ளது.

இன்றுகாலை 10 மணிமுதல் மாலை வரை இடம்பெறவுள்ள இந்த கூட்டத்தின் முடிவில் சில முடிவுகளும் எடுக்கப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேபோன்ற கருத்தரங்குகளைத் தென்னிலங்கை மற்றும் கிழக்குப் பகுதிகளிலும் இந்த சர்வமத சமாதான மன்றத்தினர் ஒழுங்கமைத்து நடத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ப)

## ஊடகவியலாளர் அச்சுறுத்தல் தொடர்பாக

# யாழ்.படைத்தளபதியை விசாரணைக்கு அழைப்பு!

ஊடகவியலாளர் ஒருவரின் உயிருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டமை தொடர்பான விசாரணைக்காக, யாழ்.மாவட்ட படைத்தளபதி யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவினரால் அழைக்கப்பட்டுள்ளார்.

கடந்த வருடம் நடைபெற்ற இந்தச் சம்பவத்தை விசாரிப்பதற்காக யாழ்.படைத்தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால பலதடவைகள் யாழ்.மனித உரிமைகள் ஆணைக் குழுவினரால் விசாரணைக்காக அழைக்கப்பட்டும் அவர் சமூகமளிக்காமையால் விசாரணைகள் பிற்போடப்பட்டன.

தற்போது எதிர்வரும் 21 ஆம் திகதி விசாரணைக்கு வருமாறு பாதிக்கப்பட்ட ஊடகவியலாளருக்கும், யாழ்.மாவட்ட படைத் தளபதிக்கும் அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்ட மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர் ருவான் சந்திரசேகரா அவர்கள் மீதான விசாரணையை மேற்கொள்வர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

# மாகாண சபைத் தேர்தலில் வாக்களிக்க வடபகுதி இராணுவத்தினருக்கு வசதி !

மாகாண சபைத்தேர்தலில் வாக்களிப்பதற்காக யாழ். மாவட்டத்தில் உள்ள இராணுவத்தினருக்கு யாழ்செலகத்தினூடாக வசதிகள் செய்துகொடுக்கப்படவுள்ளன.

இதன் முதற்கட்டமாக இங்குள்ள இராணுவத்தினரின் வாக்காளர் இலக்கங்களை அவர்கள் பார்வையிடுவதற்கு ஏற்ற வகையில் தனியான இடம் ஒதுக்கப்பட்டு, வசதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

தொடர்ந்து அவர்கள் வாக்களிப்பதற்கான வசதிகளும் செய்துகொடுக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.(ப)

# வேலைத்திட்டம் தொடர்பாக ஆராய யுனிசெவ் பிரதிநிதி யாழ்.வருகை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சிலவேலைத் திட்டம் தொடர்பாக ஆராயவென யுனிசெவ் பிரதிநிதி ஒருவர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டார்.

ஜப்பான் நாட்டைச் சேர்ந்த ஹைடக்கா மட்ஷோகா என்பவரே நேற்று யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து இங்குள்ள நான்கு வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டார்.பிரதானமாக யாழ்.மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய சுகாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், ஆரம்பச் சுகாதாரப் பணிகள், ஆரம்பக்கல்வி, நீர் வழங்கல் மற்றும் நிலத்தடி நீர் மாசுறுதல் முதலான விடயங்கள் தொடர்பாகவே அவர் ஆய்வுகளை நடத்தியுள்ளார்.

கொழும்பிலுள்ள யுனிசெவ் நிறுவனத்தின் அலுவலகத்தின் முக்கியஸ்தராக பணியாற்றும் இவர் இந்த ஆண்டு யாழ். மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள மேற்குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக நிதியொதுக்கீடு, அவற்றிற்கான செயற்திட்டங்களை வரையறுத்தல் தொடர்பாகவும் ஆராய்ந்து சென்றுள்ளதாக யாழ்.செயலக வட்டாரங்கள் தெரி வித்தன. (ப)

சோகநிகழ்வொன்றின் நினைவாக — கண்ணன்

# ஆழக்கடலில் குமுதினியாள் அழுத கதை கூறுகிறோம்

"சித்திரத் தோழியின் மடியிலே எத்தனை உயிர்கள் மடிந்தன. அத்தனையும் மறக்க முடியுமா...?



நெடுந்தீவின் வரலாற்றில் ஒரு சோக வர லாற்றை எழுதிவிட்ட வரலாற்று நாள் இன்றுடன் 19 ஆண்டுகளாக உருண்டோடிவிட்டது. ஆம், குமுதினிப் படகினிலே பல எண்ணச் சுமைகளுடன் பயணித்த பயணிகளை, வெட்டிக் கொடூரமான முறையில் கொலை செய்த மறக்கமுடியாத நினைவு நாள்.

தமிழீழ வரலாற்றிலும் கடலிலே பெருமளவு மக்கள் திட்டமிடப்பட்ட முறையிலே கொலை செய்யப் பட்ட சம்பவம் என்ற வகையிலே இத்துயர நிகழ்வு இடம்பிடித் துள்ளது.

1985 ஆம் ஆண்டு வைகாசி மாதம் 15 ஆம் திகதி நெடுந்தீவு மக்கள் தங்களின் நாளாந்த தேவைகள், வியாபார வேலைகள், வைத்திய தேவைகள் என இன்னொரன்ன மன, உ.ள, பொதிச் சுமைகளுடன் - காலை 7.45 மணிக்கு குமுதினிப் படகில் பயணததை ஆரம்பித்தனர்.

இந்தப் பயணத்திலே பச்சிளம் குழந்தை முதல் தள்ளாடும் வயோதிபர்கள் வரை வயது வேறுபாடின்றி பயணித்தனர்.

வழமைபோலவே தங்கள் பயணம் சுமுகமானதாக, கட லன்னை தாலாட்ட - தொடர்ந்திடுவோம் என்ற எண்ணக் கனவுகளுடன் சென்றவர்களின் எண்ணங்களெல்லாம் தவிடு பொடியாகும் வகையிலே வழிமறித்தது ஆயுதம் தரித்தவர்களின் பிளாஸ்ரிக் படகொன்று.

பயணித்தவர் எண்ணவுமில்லை இப்படி நடக்கும் என. ஆனால், நன்கு திட்டமிட்டமுறையிலே கொலை செய்யவேண்டுமென மறித்த கயவர்கள் - ஒவ்வொருவராக அழைதது, தம் இனவாத வெறியினை, ஒரு பாவமும் அறியாத அப்பாவிகள் மீது வெட்டியும், கொத் தியும், குதறியும் தீர்த்துக் கொண்டார்கள். படகின் பின் அறை இரதத வெள்ளம் நிறைந்திருக்க, அதிலே பயணித்த பயணிகள் ஒன்றன் மேல் ஒன்றாக வெட்டிச் சாய்க்கப்பட்டிருந்தனர். அரக்கர்களின் வெறியாட்டம் சுமார் 1 1/2 மணி நேரம் இடம்பெற்றிருக்கும். எல்லாமே முடிந்தது என எண்ணி, கொலையாளிகள் நட்டநடுக் கடலிலே குமுதினியாளையும், அவள் தாங்கிய உடலங்களையும் தத்தளிக்க விட்டுச் சென்றுவிட்டார்கள்.

மரணத்தின் வாசல் வரைக்கும் சென்ற வர்கள், தம்மால் இயன்ற முயற்சிகளை எடுத்து நீரினால் அடித்துச் சென்ற படகில் இருந்து புங்குடுதீவு கரையோர மக்களுக்கு சைகைகள், சமிக்ஞைகள் காட்டி அவர்களது உதவியுடன் பின்னர் காயமடைந்தவர்கள் மேலதிக சிகிச்சைக்காகவும், மரணித்தோர் உடல் பரிசோதனைக்குமாக கொண்டு சென்றனர்.

குமுதினியாள் மடியிலே தலைசாய்ந்த 36 பயணிகளையும், தீவகம் உள்ள வரைக்கும் - அழியாத ஒரு துயர நிகழ்வாக தொடர்ந்தே செல்லும்.

படகிலே சென்று காயமடைந்த ஒருவர்- தனது வாக்குமூலத்தில், "எங்களைத் தாக்கி யவர்களில் ஒருவரை நான் ஏற்கெனவே பார்த்திருக்கிறேன். அவருக்கு சிறிய தாடி இருப்பதையும் கண்டேன். இந்த நபர் ஏற்கனவே நயினாதீவு கடற்படை முகாமில் அதிகாரிகளுடன் கடமையில் இருக்கும்போது கண்டுள்ளேன். அவரை கடற்படைச் சீருடையுடனும் பார்த்திருக்கின்றேன்" எனக் குறிப்பிட்டுள்ளார்.

குமுதினியாள் மடியிலே உயிர் துறந்த வர்கள் ஞாபகார்த்தமாக நெடுந்தீவு மாவிலித் துறைமுகப் பகுதியிலே நினைவுத் தூபியும், மண்டபமும் அமைக்கப்பட்டு, வருடாவருடம் நினைவு நாளன்று மக்கள் அணிதிரண்டு பூசிப்பதும், அஞ்சலிப்பதும் வழக்கமானதாகும்.

கடந்த வருடம் முதல் இந்நினைவாலயத்தில் கடற்படையினரும், பொலிஸாரும் முகாமிட்டுத் தங்கியுள்ளமையானது, தீவக வாழ் மக்களை பெரும் கவலைக்கும், விசனத்திற்கும் உள்ளாக்கியுள்ளது. கடந்த வருடம் நினைவு நாளன்று காலையில் அவ்விடத்தி லிருந்து வெளியேறியவர்கள் - அஞ்சலி நிகழ்வுகள் முடிந்ததும் மாலையே மீண்டும் வந்து முகாமிட்டுவிட்டனர்.

ஒரு பாவமும் அறியாதவர்களை கொடூரமானமுறையிலே கொலை செய்து, இன வெறியைத் தீர்த்துக் கொண்டதுடன் நின்றிருக்கலாம். இன்று இப்புனிதர்களது நினைவாலயப் பகுதி, புனிதமானதாகப் பேணப்படவேண்டிய இடம். அதிலே ஆயுதங்களுடன் தங்கியிருப்பது வேதனைக்குரிய விடயமாகும். நிலைமையினை புரிந்து, மனிதாபிமான முறையிலே, அவர்களே விலகி இருப்பார்களேயானால், அது அவர்களின் பெருந்தன்மையும், இறந்தவர்களுக்குச் செய்யும் அஞ்சலியுமாக அமையும்.

"ஆழ்கடலில் குமுதினியாள் அழுத கதை கூறவா! பூவுடல்கள் துடிதுடித்து மடிந்த கதை கூறவா! நெஞ்சம் மறக்காதம்மா...! நினைவுகள் அழியாதம்மா.

**படகிலே சென்று காயமடைந்த ஒருவரின் வாக்குமூலம்**

**குறிப்பிட்ட பதினெட்டுப் பேரினதும் பிரே தப் பரிசோதனையிலிருந்து - 10 பேருக்கு மொட்டை ஆயுதத்தினால் தாக்கப்பட்டிருக்கி றார்கள் என்றும், அநேகமாக இந்தப் பத்துப் பேரும் குனிந்த நிலையில் நின்ற பொழுது, தாக்கப்பட்டிருக்கக்கூடும் எனக் கருதுவதற்கு அறிகுறிகள் இருப்பதாகவும், 04 பேர் கூரிய ஆயுதத்தாலும், 04 பேர் கூரிய, மொட்டை ஆயுதங்களாலும் தாக்கப்பட்டும், தாக்கப்பட்டு விழுந்த போது கூரிய ஆயுதங்களால் குத்தப்பட்ட அறிகுறிகள் இருப்பதாக வும், இவ்வாறு மொட்டை ஆயுதத்தாலும் தாக்கப்பட்டவர்க ளில் ஒருவர் எட்டு மாதம் நிரம்பிய குழந்தையுமாகும். இந்த சிசு மண்டை ஓட்டுக்கும், மூளைக்கும் இடையில் பாரமான மொட்டை ஆயுதத்தால் ஏற்படுத்திய காயத்தாலும், இருதயத்துக்கும், சுவாசப்பைக்கும் கூரிய ஆயுதத்தால் ஏற்படுத்திய காயத்தாலும், இறந்தது எனவும், மேலும் குழந்தையின் உடலில் மூன்று வெளிக்காயங்களும் இருந்தது.**

# 'விடுதலை' கட்டுரை தொகுப்பின் முன்னுரை




**1990 ஆம் ஆண்டு களின் முற்பகுதி, தமிழீழ விடுதலைப் போர் முனைப்புற்று வந்தகாலம். தமிழ்த் தேசியத்தின் விடுதலைக் குரலாக போராட்ட வாழ்வின் மெய்யுண்மைகளை தரிசிக்கும் கலை, இலக்கியப் படைப்புக்களைத் தாங்கிய வண்ணம், யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வந்து கொண்டிருந்தது 'வெளிச்சம்' ஏடு.**

**விடுதலைப் புலிகளின் கலை பண்பாட்டுக்கழத்தினால் பிரசுரிக்கப்பட்டு வந்த இந்தக் கலை இலக்கிய ஏட்டுக்கு கருணாகரன் அவர்கள் ஆசிரியராகவும், கவிஞர் புதுவை இரத்தின துரை நிர்வாக ஆசிரியராகவும் பணிபுரிந்து வந்தனர்.**

**வெளிச்சம் இதழில் கட்டுரைகளாக எனது படைப்புக்கள் வெளிவரவேண்டும் என, நண்பர் புதுவை இரத்தினதுரை வலியுறுத்தி வந்தார். அன்றைய சூழலில் அரசியல் வேலைப்பழுவுடன் எழுதுவதும் மிகவும் சிரமமாக இருந்தது.**

**ஆயினும் புதுவையின் அன்புத் தொல்லைக்கும், அழுத்தத்திற்கும் விட்டுக்கொடுப்பதை தவிர, வேறு வழி எதுவும் இருக்கவில்லை. ஆகவே வெளிச்சத்துக்கு எழுதுவதென தீர்மானித்தேன்.**

**ஆயினும், எதை எழுதுவது என்ற பிரச்சினை எழுந்தது. இளைஞர் பரம்ப ரையை - குறிப்பாக மாணவ சமூகத்தை புதிதாக, புரட்சிகரமாகச் சிந்திக்கத் தூண்டும் வகையில் ஏதாவது எழுதுங்கள் என்று பணித்தார் புதுவை. இறுதியாக எழுதினேன் - 'பிரமஞானி' என்ற எனது பழைய புனைபெயரில், வெளிச்சம் ஏட்டில் கட்டுரைகளாகவும், தொடர்கட்டுரைகளாகவும் எழுதனேன்.**

**அவற்றில் முக்கியமான கட்டுரைகளைத் தேர்ந்தெடுத்து, அவற்றைத் திருத்திய மைத்து செப்பனிட்டு, சிலவற்றை விரிவாக்கம் செய்து இந்தத் தொகுதியில் மறு பிரசுரம் செய்கிறோம். அத்துடன் நான் சமீபத்தில் புதிதாக எழுதிய அரசியல் கட்டுரைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன.**

**இத்தொகுதியிலுள்ள கட்டுரைகள் பல்துறை சார்ந்தவை. அரசியல், சமூக வியல், உளவியல், பொருளியல், மெய்யி யல், வரலாற்றியல், மானிடவியல் போன்ற பல்வேறு அறிவியற் பரப்புக்களை இவை ஊடுருவி நிற்கின்றன.**

**இந்த விசாரணைகள் அனைத்திற்கும் மூலப்பொருளாக விளங்கு பவன் மனிதன். ஆகவே தான் மனிதன் பற்றியும், மனித மனம் பற்றியும், மனித உணர்வு பற்றியும், மனிதத்துவம் பற்றியும், மனித வரலாறு பற்றியும், மனித விடுதலை பற்றியும் ஆழமான விசாரணைகள் செய்த சிந்தனையாளர்கள் சிலரின், புதுமையான பார்வைகளை இந்தக்கட்டுரைகள் வாயி லாக அறிமுகம் செய்து வைக்கிறேன். இந்த எழுத்துக்கள் யாரையாவது புதிதாகச் சிந்திக்கத் தூண்டும் என்ற நம்பிக்கை எனக்குண்டு.**

சமகால அரசியல் ஆய்வு — மு.திருநாவுக்கரசு

# புதிய பரிமாணம் கண்டுள்ள சர்வதேச அரசியலும் புதிய கட்டத்தை எட்டியுள்ள இலங்கை அரசியலும்

**9.5.2004 அன்று நாவலர் கலாசார மண்டபத்தில் மு.திருநாவுக்கரசு - சமகால அரசியல் நிலை தொடர்பாக ஆற்றிய உரையிலிருந்து...**

*(நேற்றைய தொடர்ச்சி...)*

இதைவிடவும் சுவாரஷ்யமான விடயம் என்னவெனில், பொஷ்னிய சபை தெரிவுசெய்த ஜனாதிபதியை குரோஷ்னிய சபை அங்கீகரிக்கவேண்டும். குரோஷ்னிய சபை தெரிவுசெய்த ஜனாதிபதியை பொஷ்னிய சபை அங்கீகரிக்க வேண்டும். பொஷ்னிய சபையின் பெரும்பான்மையினரால் குரோஷ்னிய ஜனாதிபதி அங்கீகரிக்கப்படாவிட்டால், அவர் அதிலிருந்து விலக்கப்பட்டு, புதுப் பிரதிநிதி கொண்டுவரப்படுவார். அவ்வாறே பொஷ்னிய ஜனாதிபதியின் நிலையும்.

ஏனெனில், குரோஷ்னியர் விரும்பாத ஒருவர் பொஷ்னிய ஜனாதிபதியாக இருக்கமுடியாது.

பொஷ்னியர் விரும்பாத குரோஸ்னியர் ஒருவர் - ஜனாதிபதியாக இருக்க முடியாது. அவ்வாறெனில் பொஷ்னியனோ, குரோஷ்னி யனோ இனவாதம் பேசமுடியாது.

இனவாதத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க இந்த உலகம் கண்டிக்கின்ற மிக சிறந்த தீர்வென்று இதனை நான் சொல்வேன். அத்துடன், அங்கு பொஷ்னியன் மொழியும் உத்தியோக மொழி. குரோஷ்னிய மொழியும் உத்தியோக மொழி. இதனைவிட அங்கு இருக்ககூடிய சிறிய சிறிய மொழிகளை, அவர்கள் தங்கள் தேவைகளுக்குப் பிரயோ கிக்கலாம். வர்த்தக மொழியாகவோ, கல்வி மொழியாகவோ பிரயோகிக்கலாம் தடையில்லை.

இவ்வாறு இனங்கள் பற்றிய ஒற்றுமையை உருவாக்கிய இடத்தில் பொஷ்னியா - கெசகோவின் சமஷ்டி அமைப்பு முறையின் கீழ் காணப்படுகின்ற அந்தக் கட்டுக்கோப்பானது, உலக வரலாறு இதுவரை கண்டிராத ஒரு சிறந்த வழி.

ஆனால், இவர்கள் உருவாக்கிய இந்த வழியை நாம் முழுமையாக ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றில்லை.

பொஷ்னியா - கெசகோவினருக்கிடையே பத்து கன்ரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இவற்றிலுள்ள சில அதிகார இடங்களில் சில பிரச்சனைகள் இருக்கின்றன, ஆனாலும், இதிலும் சில சுவாரஷ்யமான விடயம் உண்டு. என்னவெனில் வெளிநாடுகளுடனோ அல்லது அயல் நாடுகளுடனோ ஒப்பந்தம் செய்ய உரிமையுண்டு, நாடாளுமன்றின் அனுமதியுண்டு.

எனவே, அடிப்படையில் பல விடயங்களில் நெகிழ்ச்சியாக இந்தப் போக்குகள் செல்கின்றன. ஆனால், இந்தப் போக்கை கிழக்கு ஐரோப்பாவில் உருவாகிய அமெரிக்கா - உலகின் ஏனைய பகுதிகளில் உருவாக்குமா? என்ற கேள்விக்கு நாம் பதிலைக் காண வேண்டும்.

ஏனெனில், கிழக்கு ஐரோப்பாவில் கிழக்கைரோப்பிய சாம்ராஜ்ஜிய வளர்ச்சியை குலைப்பதற்கு, அங்கே அவர்களுக்கு தேவைப்பட்ட அனைத்துப் பலங்களையும் பிரயோகிக்கமுன் வந்த பொழுது, இப்படி ஒரு அறிவுபூர்வமான முடிவுக்கு வந்தார்கள். இந்த முடிவை அவர்கள் பூமியின் எல்லாப் பகுதிக்கும் எடுப்பார்கள். அந்தக் கேள்வி தான் பிரதானமானது இது ஒருபுறம்.

இங்கு நாம் இந்தப் புதிய உலகமய மாக்கல் போக்கின் கீழ் - சமஷ்டி, பிரதேச சுயாட்சி அல்லது நாடுகள் பிரிந்து செல்லுதல் இந்த மூன்றும் உலக அரசியலில் ஏற்பட்டபுதிய கட்டம் என்பதை விளங்கிக் கொண்டால் போதும்.

அந்த அடிப்படையில் இப்போது ஒன்றை நினைத்திருக்கிறார்கள். அவர்கள் ஜனநாயகம் என்று கூறும் அவர்கடைய வெள்ளை ஜனநாயகத்தின் கீழ் ஒரு எல்லைக்குட்பட்ட சுதந்திரமுண்டு. அவர்கள் என்ன கூறுகின் றார்களென்றால், பூமியில் இனிமேல் ஆயுதப்போராட்டம் நடக்கக் கூடாதென்றார்கள். ஆனால், பிரச்சினைகள் ஜனநாயகபூர்வமாக தீர்க்கப்பட வேண்டுமென்கிறார்கள். அதற்கு அவர்கள் பொதுஜன வாக்கெடுப்பு என்னும் கருத்தை பிரயோகிக்கின்றார்கள்.

அவ்வாறு பிரயோகிக்கப்பட்ட கருவி கிழக்குத்தீமோரில் நாடு பிரிவிற்குள் கொண்டு போய் விட்டுள்ளது. எரித்திரியாவில் நாடு பிரிவிற்குள் கொண்டுபோய் விட்டுள்ளது. இப்போது தென் சூடானில் ஆறு ஆண்டுகளுக்குப் பின் பொது ஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. அதுவும் நாடு பிரிவில் கொண்டு சென்று விடப்படும். அவ்வாறு பிரிவதை அவர்கள் ஏற்றுக்கொள்கின்றார்கள்.

ஆயுதப் போராட்டம் இல்லாமல் நாடு பிரிவதை இன்று உலக ஏகாதிபத்தியம் ஏற்றுக்கொள்கின்றது. ஏன் இதற்கு பதில்காண கனதூரம் செல்லத்தேவையில்லை. உலகிலுள்ள எல்லா நாடுகளுமே தற்போது மாகா ணங்கள்தான். உலகப் பொருளாதார அமைப்பின்கீழ் உலகிலுள்ள எந்தப் பகுதியும் உலக அரசியல் பொருளாதாரத்தின்கீழ் ஒரு மாகாணமாகத்தான் இயங்கும்.

எவ்வாறு அரசு என்று சொல்லப்படுகின்ற முழு அரசுகள்கூட, மாகாணம் எனும் அந் தஸ்தின்கீழ் தீர்மானமெடுக்க முடியாதநிலையில் உள்ளனவோ, அதேபோல் இலங்கை இன்று ஒரு மாகாணம் தான். ஏனெனில், உலகம் - அரசியல், பொருளாதார சந்தை யில் வெளிநாடுகளுடைய அறிவுறுத்தல்களுக்கு இலங்கை கட்டுப்பட வேண்டியதாகிறது. அவர்களுடைய எல்லைகள், வீச்சுக்கள் நாட்டிற்கு நாடு வேறுபடலாம். இது வளர்ந்து வளர்ந்து செல்கின்றது.

இந்த வளர்ச்சிப் போக்கு நாம் இறுதியில் சொல்லப்போகின்ற முழு அளவிலான ஒரு மாகாண எல்லையைப் போய் அடைய முடியும். அப்படியென்றால், ஒரு நாடாக இருப்பது இரண்டு நாடாக பிரிப்பதில் ஒரு அர்த்தமுமில்லை. ஏன்?

வெகுஜன தொடர்பு சாதனங்கள் வளர்ந்துவிட்டன. பொருளாதார இணைப்புகள் ஏற்பட்டுவிட்டன. ஆனபடியால், எந்த நாட்டையும் இலகுவாக சந்தைக்குள் கொண்டு வருவது சாத்தியம். எனவே, எல்லைகள் என்பன பெயருக்கு அரசியல் எல்லைகளேதவிர, இந்தப் பூமியில் பொருளாதார எல்லைகளல்ல. பொருளாதார எல்லைகள் இருந்தால் மட்டும்தான் ஏகாதிபத்தியமோ, மேற்குலகமோ பயப்பட வேண்டும்.

உலகில் இன்று பொருளாதார எல்லையில்லை, அரசியல் எல்லைகள்தான் உள்ளன. எனவே, அரசியல் எல்லை எவ்வள வானதாக இருந்தால்தான் என்ன.

ஆனபடியால் ஒரு காலகட்டத்தில் அரசியல் எல்லைகளும், பொருளாதார எல்லைகளும் ஒன்றோடொன்று இணைந்திருந்த காலகட்டத்தில், முதலாளித்துவத்தின் வளர்ச்சிக்கு நாடுகள் பிரிவது தடையாக இருந்தது. நாடுகள் பிரிவது சந்தையைக் குறுக்குவதாக இருந்தது.

சந்தை வளர்ச்சிக்கும், பொருள் உற்பத்திற்கும், பொருள் பரிவர்த்தனைக்கும் தடையாக இருந்தது. இப்போது எல்லைகள் அரசியல் எல்லைகளாகவுள்ளன. பொருளாதாரம் குழப்பப் பொருளாதாரமாக வுள்ளது.

(தொடரும்...)

## காஸாவின் ரபா அகதிமுகாம்
# குடியிருப்புக்களை அழிக்க இஸ்ரேல் படைக்கு உத்தரவு!

காஸா பிரதேசத்தின் தென் பகுதியில் ரபா அகதிமுகாம் அமைந்துள்ள பகுதியில் பலஸ்தீனர்களின் குடியிருப்புகளை அழித்துவிடுவதற்கான உத்தரவு இஸ்ரேலிய படையினருக்கு வழங்கப்பட்டுள்ளதாக, இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது.

இஸ்ரேலிய படையினருக்கும், பலஸ்தீனர்களுக்குமிடையே தொடரும் மோதல்களில் 12 பலஸ்தீனர்களும், 5 இஸ்ரேலிய படையினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

எகிப்தின் எல்லைப் பிரதேசத்தில் அமைந்துள்ள காஸாவின் தென்பகுதியில், பாதுகாப்பு வலயத்தை அதிகரிக்கும் நோக்கில் குடியிருப்புகள் அழிக்கப்பட்டு வருகின்றன. அவ்விடத்திலிருந்து வெளியேற்றப்படும் மக்களுக்கு புதிய வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணியினை இஸ்ரேல் மேற்கொள்ளும் எனவும் அந்த வானொலி மேலும் தெரிவித்தது.

## குவான்ரனமோ சிறையில் துன்புறுத்தப்பட்டதாக
# விடுவிக்கப்பட்ட கைதிகள் இருவர் அமெரிக்க அதிபர் புஷ்ஷிற்கு கடிதம்



கியூபாவின் குவான்ரனமோ சிறையில் தாம் தடுத்து வைக்கப்பட்டிருந்தவேளை - அமெரிக்கப் படையினரால கடும் துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டதாக தற்போது விடுதலையான இரண்டு பிரிட்டன் நாட்டவர்கள் அமெரிக்க ஜனாதிபதி புஷ்ஷிற்கும், அமெரிக்க செனட்டிற்கும் பகிரங்க கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

சாபிக் ரசுல், அஷிப் இக்பால் ஆகிய இருவருமே இவ்வாறு கடிதம் அனுப்பிய பிரிட்டன் நாட்டவராவார்.

அவர்கள் அனுப்பிய அந்தக் கட்டித்தில் தெரிவித்துள்ளதாவது-

கைதிகளிடமிருந்து விபரங்களைப் பெறுவதற்காக அமெரிக்கப் படையினர் பிரகாசமான வெளிச்சங்களையும், காதைச் செவிடாக்கும் ஒலிகளையும், நாய்கள் மூலமான அச்சுறுத்தல்களையும் விடுத்தனர். அத்துடன் சிறிய குற்றங்களுக்காக, பெண் படையினர் நிற்கும் போது எம்மை நிர்வாணமாக சிறைப்பகுதிக்குள் நடமாடித்திரிய விட்டனர்.

கைகளிரண்டையும் சங்கிலியால் பிணைத்தபின்னர் நீண்டநேரம் குதிக்காலில் இருக்கவைத்து விசாரணைகளையும் மேற்கொண்டனர். அத்துடன் எமக்கு எந்த நேரம் தேவையோ அந்த நேரம் எதுவும் செய்யவேண்டுமென படையினர் எம்மை நிர்ப்பந்தித்தனர்.

அல்கொய்டா அமைப்பின் தலைவர் ஒசாமா பின் லேடனுக்கு தாம் சாரதிகளாக இருந்த பொய்க்குற்றச்சாட்டை தம்மீது சுமத்தி படையினர் கைதுசெய்து தம்மை இரண்டுவருடம் அடைத்துவைத்ததாகவும், இவர்கள் தமது கடிதத்தில் தெரிவித்துள்ளனர்.

ஆனால், இந்த விடுவிக்கப்பட்ட கைதிகள் எழுதிய கடிதத்தில் எதுவித உண்மைகளும் இல்லையென குவான்ரனமோவிலுள்ள அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன் இவர்கள் தெரிவித்தது போல தாம் எதுவித பிரயோகத்தையும் செலுத்தவில்லை என குவான்ரனமோவிலுள்ள அமெரிக்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## குற்றச்சாட்டில் வெளியேற்றப்பட்ட
# தென்கொரிய ஜனாதிபதி மீள பதவியை ஏற்கவுள்ளார்



தென்கொரிய ஜனாதிபதி ரோ மோ கைம் மீண்டும் பதவியைத் தொடரவுள்ளார். இவர் பக்கச்சார்பின்மையிலிருந்து விலகி யூரிக் கட்சிக்கு ஆதரவு தெரிவித்தார் எனக்கருதி பதவியிலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.

அரசியல் சட்ட நீதிமன்ற விசாரணைகளில் பதவியிலிருந்து வெளியேற்றக்கூடிய அளவுக்கு குற்றம் புரியவில்லையென தெரிவிக்கப்பட்டிருந்தது.

ரோ மோ மீண்டும். ஜனாதிபதி பதவிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை கொன்சவேற்றிக் கட்சியின் அரசியல்வாதிகளுக்கு தோல்வியாக அமைந்துள்ளது. ஜனாதிபதி ரோவின் வெற்றியை ஆதரவாளர்கள் நீதிமன்றத்திற்கு வெளியே கொண்டாடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி ரோவை பதவியிலிருந்து வெளியேற்றுவதற்கு மேற்கொண்ட முயற்சிகளுக்கு தென்கொரிய மக்கள் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

ஜனாதிபதி ரோ மிகுந்த பலத்துடன் நாடாளுமன்றத்திற்கு வரவுள்ளதாக பி.பி.சியின் சார்ல்ஷ் ஸ்கான்லொன் கருத்துத் தெரிவித்தார்.

# ஈராக்கின் நஜாப் நகரில் மீண்டும் மோதல் வெடித்தது!

ஈராக்கின் புனித நகரான நஜாப்பில் - அமெரிக்கப் படையினருக்கும், ஷியா முஸ்லிம் தலைவர் மொக்ரடா அல் சதாரின் ஆதரவாளர்களுக்குமிடையே மோதல்கள் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நகரின் பள்ளிவாசல் ஒன்றுக்கு அருகில் அமைந்துள்ள மயானத்தில் இரு அமெரிக்க யுத்த தாங்கிகள் பிரவேசித்ததும், மோதல்கள் ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈராக்கின் தென்பகுதியில் கடந்தமாதம் ஆன்மீகத் தலைவர் அல் சதார் அமெரிக்கர்களுக்கு எதிரான போர் நடவடிக்கைகளை ஆரம்பித்தபின்னர் இடையிடையே மோதல்கள் நிகழ்ந்துவந்துள்ளன.

இதனிடையே தலைநகர் பாக்தாத்தில் 300 கைதிகளை அபு



கரெப் சிறையிலிருந்து அமெரிக்கப் படையினர் விடுதலை செய்து வருகின்றனர். முதற்கட்டமாக ஒரு தொகுதி கைதிகள் நேற்று விடுவிக்கப்பட்டுள்ளனர்.

அபு கரெப் சிறையிலுள்ள கைதிகள் அமெரிக்கப் படையினரால் துன்புறுத்தப்பட்டமை தொடர்பான படங்கள் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஜப்பான் பிரதமர் கொய்சுமி வடகொரியா செல்லவுள்ளார்

ஜப்பானியப் பிரதமர் யுனிசிரோ கொய்சுமி வடகொரியாவிற்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

வடகொரியத் தலைவர் கிம் யொங் இல் உடன் பனிப்போர் காலத்தில் வடகொரியாவிற்கு கடத்தப்பட்ட ஜப்பானியப் பிரஜைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகளில் ஜப்பானியப் பிரதமர் கலந்து கொள்வதற்கு திட்டமிட்டுள்ளார். ஜப்பானியப் பிரதமரின் முன்னைய விஜயத்தின்மூலம் கடத்தப்பட்ட ஐந்து ஜப்பானியர்கள் விடுதலை செய்யப்பட்டிருந்தனர்.

ஆனால், அவர்களின் 8 குடும்ப அங்கத்தவர்கள் தொடர்ந்தும் வடகொரியாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். ஆனால், உறவினர்கள் நேரடியாகச் சமூகமளித்து தடுக்கப்பட்டிருப்பவர்களை அழைத்துச்செல்ல வேண்டுமென வடகொரியா தெரிவித்துள்ளது.

மேலும் பல ஜப்பானியர்கள் வடகொரிய முகவர்களினால் கடத்தப்பட்டிருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகிறது. முதன்முறை ஜப்பானியப் பிரதமர் வடகொரியத் தலைவரைச் சந்தித்த நேரத்தில் 13 பேர்வரை கடத்தப்பட்டதாக வடகொரியத் தலைவர் தெரிவித்திருந்தார்.

கடத்தப்பட்ட ஜப்பானியர்கள் விவகாரத்தில் சமரசமான முடிவு கிடைக்கும் நிலையில் இரு நாடுகளின் இராஜதந்திர உறவுகள் வலுப்பெறலாமெனவும் தெரிவிக்கப்படுகிறது.




# டென்மார்க் நாட்டின் இளவரசர் அவுஸ்ரேலிய பெண்ணைத் திருமணம்



(கோபென்கேகன்)

டென்மார்க்கின் முடிக்குரிய இளவரசர் பெரெடரிக் - அவுஸ்ரேலியாவைச் சேர்ந்த 32 வயதுள்ள சட்டத்துறை பட்டதாரியான மேரி எலிசபெத் டொனால்சனை நேற்று திருமணம் செய்வதாக இருந்தது. இவர்களின் திருமணத்தைக்காண 2 லட்சத்து 50 ஆயிரம் வரையான மக்கள் தலைநகர் கோபென்கேகனில் ஒன்றுகூட இருந்தனர். இந்தத் திருமணத்தின்மூலம் ஐரோப்பிய பெண்ணொருவர் டென்மார்க்கின் இளவரசியாகின்றார்.

உலகத் தலைவர்கள் இந்த வைபவத்தில் பங்குகொள்ளவுள்ளனர். ஒருவாரகாலம்வரை நிகழ்ச்சிகள் தொடரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 2000 ஆம் ஆண்டு அவுஸ்ரேலியாவின் தலைநகர் சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளின்போது இவர்கள் இருவரும் முதன்முறையாகச் சந்தித்துக் கொண்டமை குறிப்பிடத்தக்கது.


தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் மதியுரைஞரும், தத்துவாசிரியருமான

கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய அரசியல், தத்துவம் சார்ந்த கட்டுரைகளின் தொகுப்பு



## 'விடுதலை'

## வெளியீட்டு விழா




இடம் : யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கம்

காலம் : 16.05.2004 ஞாயிறு மாலை 3.30 மணி

"அரசியல், சமூகவியல், உளவியல், பொருளியல், மெய்யியல், வரலாற்றியல், மானுடவியல் பற்றியும், மனித விடுதலை பற்றியும் விசாரணை செய்த சிந்தனையாளர் சிலரின் புதுமையான பார்வைகளை இந்நூல் அறிமுகம் செய்துவைக்கிறது"

**நிகழ்ச்சிகள்**

| | |
|---|---|
| தேசியக்கொடியேற்றல் | செல்வி.கலைவிழி |
| பொது ஈகச்சுடரேற்றல் | |
| வரவேற்புரை | திரு. சி.சேரலாதன் |
| தலைமையுரை | திரு. சி.இளம்பரிதி |
| வெளியீட்டுரை | கவிஞர் புதுவை இரத்தினதுரை |
| வெளியீடு | திரு.சோ.தங்கன் |
| பெறுபவர் | பேராசிரியர் சு.மோகனதாஸ் |
| சிறப்புப் பிரதிகள் வழங்கல் | திரு.கி.பாப்பா |
| மதிப்பீட்டுரைகள் | பேராசிரியர் சோ.கிருஷ்ணராஜா |
| | திரு.அ.யேசுராசா |
| | க.வே.பாலகுமாரன் |
| நன்றியுரை | திரு.வளநாடன் |

அறிவுப்பெட்டகமான இந்நூல் வெளியீட்டுவிழாவில் அறிஞர்கள், அரசியலாளர்கள், சமூகப்பிரமுகர்கள் எனப் பலர் கலந்து கொள்கின்றனர். உங்களையும் எதிர்பார்த்திருக்கிறோம்.

விழாவில் மட்டும் விலை ரூபா 300/=

விடுதலைப்புலிகள் கலைபண்பாட்டுக்கழகம், தமிழீழம்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பல்சர் ரக மோட்டார் சைக்கிள் இனந்தெரியாதோரால் எரிப்பு!

## யாழ். மனோகராச் சந்தியில் நேற்றிரவு சம்பவம்



எரிந்துகொண்டிருக்கும் மோட்டார் சைக்கிளை பார்வையிடும் பொலிஸார்.

(யாழ்ப்பாணம்)

யாழ். மனோகராச் சந்தியில் நேற்று நள்ளிரவு பல்சர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டது.

அத்துடன், மோட்டார் சைக்கிளில் வந்தவராக் கருதப்படும் நபர் ஒருவர் வீதியோரமாக கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் போடப்பட்டிருந்தாகவும், பின்னர் இவர் தப்பியோடியதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

நேற்றிரவு 11.30 மணியளவில் மனோகராச் சந்தியில் இந்தச் சம்பவம் நடைபெற்றது.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு யாழ்.பொலிஸ் நிலையப் பொலிஸார் சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# அமைச்சர் டக்ளஸின் பொறுப்புகளில் மாற்றம்!

(கொழும்பு)

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்த அமைச்சுக்களில், கல்வி மற்றும் தொழில் பயிற்சிகளுக்கான அமைச்சு தற்போது கல்வி மற்றும் தொழில் பயிற்சிகளுக்குத் துணை புரிவதற்கான அமைச்சு என மாற்றப்பட்டிருக்கிறது.

புதிதாக வெளியிடப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழ் வரும் திணைக்களங்கள், பொறுப்புக்கள் தொடர்பான வர்த்தமானி அறிவிப்பிலேயே இந்த விபரம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த அமைச்சுக்கான அதிகாரங்கள் மேல் மாகாணம், ஊவா மாகாணம், மத்திய மாகாணம் ஆகியவற்றுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் வடக்கு - கிழக்கு ஆகிய மாகாணங்கள் தற்பொழுது அந்த அமைச்சுப் பொறுப்புக்களிலிருந்து நீக்கப்பட்[illegible]மையும் குறிப்பிடத்தக்கது.

# நினைவுக் கல் திரை நீக்கம்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவுக் கடற்பகுதியில் கடந்த 29.04.1994 இல் கடற்படையினருடனான மோதலின்போது வீரச்சாவைத் தழுவிக்கொண்ட இல.26, மகேந்திரபுரம், பாசையூரை நிரந்தர முகவரியாகவும், கச்சேரி கிழக்கு, அரியாலையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட லெப்.தமிழினியன் (பாலையா - ஜெயச்சந்திரன்) என்ற மாவீரரின் நினைவுக்கல் நேற்று கோப்பாய் மாவீரர் துயிலுமில்லத்தில் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டது.

நேற்று மாலை 5 மணியளவில் இந்த மாவீரரின் திருவுருவப்படம் கோப்பாய் மாவீரர் துயிலுமில்ல மாவீரர் நினைவு மண்டபத்தில் வைக்கப்பட்டு வீரவணக்கக் கூட்டம் இடம்பெற்றது.

மாவீரர் துயிலுமில்லத்தைச் சேர்ந்த கண்ணன் தலைமையில் நடைபெற்ற வீரவணக்கக் கூட்டத்தில் ஈகைச்சுடரினை மாவீரரின் தந்தையார் ஏற்றிவைக்க, மாவீரரின் திருவுருவப்படத்திற்கான மலர்மாலையை தாயார் அணிவித்தார். தொடர்ந்து யாழ்மாவட்ட அரசியற்துறையைச் சேர்ந்த யாழவன் நினைவுரை ஆற்றினார்.

நினைவுரையைத் தொடர்ந்து மாலை 5.45 மணியளவில் மாவீரரின் நினைவுக்கல்லை அவரது பெற்றோர் திரை நீக்கம் செய்துவைத்தனர்.

இந்நிகழ்வில் போராளிகளும் பொதுமக்களும் கலந்துகொண்டனர்.

# யுவதி கடத்தலுடன் தொடர்புடைய இளைஞர்களுக்கு விளக்கமறியல்!

யுவதியைக் கடத்திய சம்பவத்துடன் தொடர்புடைய ஐந்து நபர்களையும் எதிர்வரும் 26 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

யாழ். நீராவியடிப் பகுதியில் வைத்து, க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதிவிட்டு வீடு திரும்பிய யுவதிய்ய வானில் கடத்திச் சென்ற சமயம், பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்ட ஐவருமே நேற்று யாழ். மாவட்ட நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இதன்போது பொதுமக்களின் தாக்குதலுக்குள்ளாகி, காயமடைந்திருந்த இரத்தினசிங்கம் உசாநந்தன் என்பவரை சிறைச்சாலை உத்தியோகத்தர்களின் பாதுகாப்பில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்குமாறும் ஏனைய நால்வரையும் விளக்கமறியலில் வைக்குமாறும் நீதிவான் உத்தரவிட்டார்.

எனினும், மற்றைய நால்வரும் தமக்கும் பொதுமக்கள் தாக்கியதால் உடல்வலி இருப்பதாகத் தெரிவித்துள்ளனர். இதனையடுத்து அவர்களையும் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தி அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு, யாழ். போதனா வைத்திய சாலையின் சட்ட மருத்துவ அதிகாரிக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

# தமிழக அகதிமுகாமிலிருந்து 50 அகதிகள் மன்னார் திரும்பினர்

(மன்னார்)

தமிழ்நாடு - திருச்சி மாவட்டம் பவானி அகதிமுகாமில் தங்கியிருந்த ஈழத் தமிழர்களில் 50 பேர் நேற்று முன்தினம் மன்னாரை வந்தடைந்தனர்.

கடந்த புதன்கிழமை இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் ஐந்து இந்திய மீன்பிடிப்படகுகளில் ஏறிவந்த இவர்களை இந்திய மீனவர் தீடை எனும் மணற்பிட்டியில் இறக்கிவிட்டுச் சென்றனர்.

இவ்வாறு நடுக்கடலில் மணற்பிட்டியில் நின்ற இவர்களை மன்னார் பேசாலையிலிருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் தமது படகுகளில் ஏற்றிவந்த வேளை தலைமன்னார் கடற்படையினர் இவர்களைக் கைதுசெய்து தலைமன்னார் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

தலைமன்னார் பொலிஸார் அகதிகளை நேற்று மன்னார் நீதிமன்றில் ஆஜர் செய்தவேளை பதில் நீதிவான் ஜோன்தாஸன் இவர்களை சொந்த இடத்திற்கு அனுப்பிவைக்குமாறு உத்தரவிட்டார்.

தலைமன்னார், பேசாலை, பள்ளிமுனை, சிறுத்தோப்பு, செட்டிகுளம் மற்றும் யாழ்ப்பாணம் இளவாலையைச் சேர்ந்த இவர்கள் நேற்றே அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். (201)

## திட்டமிடல் கற்கை மாணவர்களின் களஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக திட்டமிடல் கற்கை நெறி மாணவர்கள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் யாழ்.நகரமைய வியாபாரப்பகுதியின் இன்றைய நிலையும் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் இன்று ஆய்வு ஒன்றை மேற்கொள்ளவுள்ளனர்.

# உலகவங்கிக் குழுவினர் கிளிநொச்சிக்கு விஜயம்!

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள குளங்களையும், நியாப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பணிகளையும் மதிப்பிடுவதற்காக உலகவங்கிக் குழுவொன்று இன்று கிளிநொச்சி செல்லவுள்ளது.

உலகவங்கியின் பணிகளை மதிப்பிடும் பிரிவுப் பொறுப்பதிகாரியான சாகிபு அலாம் த்லைமையிலான மூன்று பேர் அடங்கிய குழுவினரே இன்று பலாலி விமானநிலையத்திற்கு வருகைதந்து, அங்கிருந்து யாழ்.செயலகத்தில் இயங்கும் நியாப் திட்ட அலுவலக அதிகாரிகளால் கிளிநொச்சிக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

அங்குள்ள குளங்கள் மற்றும் நீர்ப்பாசன நடவடிக்கைகள் குறித்து ஆராய்ந்தபின்னர் அங்கிருந்து மீண்டும் யாழ்.வந்து நாளை யாழ்.மாவட்டத்தல் நியாப் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகள் குறித்து ஆராயவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# உயர்தர வகுப்பு மாணவருக்கு தகவல் தொழில்நுட்பப் பாடம்!

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தர வகுப்புக்களில் பொதுத் தகவல் தொழில்நுட்பப் பாடம் இந்த வரும் ஜூன் மாதம் முதல் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இந்தப் பாடம் கல்விப் பொதுத் தராதர உயர்தர வகுப்பில் ஒரு பாடவிதானமாக அமையும் என்று கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாடத்தைக் கற்பிப்பதற்கு ஆசிரியர்களுக்கு வழங்குவதற்கான துரித நடவடிக்கைகள் [illegible]க்கப்பட்டு வருவதாகவும் கல்வி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் ஓகஸ்ட்டில்!

## பரீட்சை திணைக்கள அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள், ஓகஸ்ட் மாத முதல் வாரத்தில் வெளியிடப்படும் என்று பரீட்சை திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உயர்தரப்பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதியுடன் முடிவடையவுள்ளது.

உரிய காலத்திற்கு பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிப்பதற்காகவே, இந்தப் பரீட்சைப் பெறுபேறுகள் உரிய காலத்துக்குள் வெளியிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## அன்ரன்...

பிப்பது குறித்து நோர்வே தூதுக் குழுவுடன் பேச்சுக்களை நடத்திய பின்னர், நேற்றுக்காலை விமானப் படையின் ஹெலிகொப்ரர் மூலமாக கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கொழும்புக்குச் சென்று - மாலையில் கட்டுநாயக்க விமானநிலையத்திலிருந்து லண்டனுக்குப் புறப்பட்டுச் சென்றார்.

கிளிநொச்சி மத்திய விளையாட்டரங்கிலிருந்து புறப்பட்டுச்சென்ற கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை, தமிழீழ அரசியற்துறைப பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி, காவலதுறைப் பொறுப்பாளர் பா.நடேசன், விடுதலைப் புலிகளின் தளபதிகளான கேணல் தீபன், கேணல் விதுஷா, கேணல் துர்க்கா, மற்றும் தளபதிகள் பொறுப்பாளர்கள் வழியனுப்பி வைத்தனர்.

## வட - கிழக்கு...

மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பு அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இராஜாங்கச் செயலாளர் கிறிஸ்ரினா றொக்காவிடம் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மேலும் தெரிவிக்கையில் -

அடுத்த மூன்று மாதங்களுக்குள் சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகாவின் வழிகாட்டலில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும். அதற்கு சகல கட்சிகளதும் ஒத்துழைப்புப் பெற்றுக் கொள்ளப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஒட்டுசுட்டான்...

ஒட்டுசுட்டானில் அமைந்துள்ள முல்லை மாவட்ட சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசக் காரியாலயத்துக்கு அண்மையிலுள்ள காணி ஒன்றிலேயே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

இந்தக் கிணற்றில் இருவரும் நீரெடுக்கச்சென்றவேளையிலேயே வெடிபொருள் வெடித்தது.

இந்தச் சம்பவத்தில் மூங்கிலாறு உடையார்கட்டைச் சேர்ந்த சந்திரன் சத்தியசீலன் (வயது 18) என்ற இளைஞரே உயிரிழந்தவராவார். வேரோவில் உடையார்கட்டைச் சேர்ந்த சிவகுமார் (வயது 17) என்பவர் படுகாயமடைந்த நிலையில் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

## 51 ஆவது....

ஆவது டிவிசனின் கட்டளை அதிகாரியாகப் பணியாற்றிய பிரிகேடியர் ஏ.சந்திரசிறியும் கொழும்பிலுள்ள இராணுவத் தலைமையகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டிருப்பதாகவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

## சமாதான...

மாற்றமும் இல்லை.

தமிழீழ விடுதலைப் புலிகள் பயங்கரவாத நடவடிக்கைகளைக் கைவிட்டு ஆயுதங்களைக் கீழே வைக்கும்வரை அமெரிக்காவினால் பிரகடனப்படுத்தப்பட்ட தடை தொடரும் என்று அவர் குறிப்பிட்டார்.(01)

## புலிகள் மீதான...

தெரிவித்தார்.

இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை தமிழீழ விடுதலைப் புலிகளிடம் வழங்கப்படுவதன்மூலமே இது சாத்தியப்படும் எனவும், அமெரிக்காவுக்கான தெற்காசிய விவகார பிரதிச் செயலாளரான கிறிஸ்ரினா றொக்காவிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வலியுறுத்தியது.

இந்தச் சந்திப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (01)

பதிப்புலக வேந்தர்களே!
நீண்டநாள் உங்கள் எதிர்பார்ப்பினை 120 நிமிடங்களில் நாங்கள் எமது மண்ணில் நிறைவேற்றுகின்றோம்
நிலா பதிப்பகம்

PCC COLOUR DIGTAL PRINTER

சகல விதமான அளவுகளிலும் கலர் பிரித்தல் செய்து கொடுக்கப்படும் (COLOUR SEPARATION) சேவையினை அதிவேகமான முறையில் மிககுறைந்த செலவில் செய்து வழங்குகின்றோம்.
- 4X8 அளவுகளில் PCC கலர் பிறின்ட் சேவை (4x8 SIZE PCC COLOUR DIGTAL PRINT)
- 4X8 அளவுகளில் COOL & HOT மென்காப்பிடுகை சேவை 4x8 SIZE COOL & HOT LAMINATING SERVICE
- அழுத்திப் பதிதல் சேவை HOT IMPOSING (GOLD & SILVER PRINT SERVICE)
- கலண்டர் கிளிப் போடுதல் (SPIRAL CLIP & MATERIAL CLIP) SERVICE
பிரதான சாலை, கிளிநொச்சி.
தொலைபேசி: 021-2285935
தொலைநகல்: 021-228 5935

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 15.05.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.